
# சோதிடமலர்

# SOTHIDA MALAR



| | | | |
|---|---|---|---|
| | | | குரு |
| | சுக்ல வரு மார்கழி மீ | | கேது சந் |
| சுக் ராகு | | | லக் |
| சூரி, புத சனி நெ யுரே | செவ் | | |

இவ்விதழில்...........

- ❋ விரதங்களும் வியாபகங்களும்
- ❋ சோதிடத்தில் விஞ்ஞான மெய்ஞ்ஞானம்
- ❋ ஜாதகத்தில் சனி
- ❋ ஆய்வுமன்றம்
- ❋ சக்தி விரதங்கள்
- ❋ இம்மாத வானியற் காட்சிகள்

(16-12-89 — 13-01-90)

விலை ரூபா: 4-00

உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

மலர் 12 ❋ இதழ் 9

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

சுக்ல ஸூ மார்கழி மீ
( 16 - 12 - 89 )

ஸாக்ஷியாய ஸர்வநாத ஸம்பூதாய
ஸர்வஜ்ஞாய ஸர்வஜ்ஞவசிதாய ஸர்வேஸ்வராய
டிக்ஷியாய நடராஜ ஸாக்ஷாத்வியாய
சாமிஜ ... தேவ தஹநாய நமஸ்ஶிவாய

★ ★ ★

நீடாழி யுலகத்து மறைநாலோ டைந்தென்று நிலை
(நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராஜன் மாபாரதஞ்சொன்ன
(நாள்
ஏடாக மாமேரு வெற்பாக வங்கூர் எழுத்தாணி தன்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாம்

★ ★ ★

## ஞான விருந்து :-

❋ மனவமைதி, தன்னடக்கம், பொறுமை இவை ஞானவழிக்குக் காரணிகளாகும். இஞ்ஞானத்தினால் ஆத்மாவை உணரவும் அவ்வாத்மாவே ஒளிமயமானதாகவும் அவ்வொளியே பிரகாசமானதாகவும், இப்பிரகாசமே அஞ்ஞான இருளை நீக்க வல்லதாகவும் உள்ளதென்பதை உணருவதே இவ் ஞானத்தின் சிறப்பாகும்.

❋ நோய் நொடி, துன்பம், கஷ்டம், துக்கம் இவையெல்லாம் எமது கெட்ட கர்மங்களை நீக்குவதற்கு உறுதுணை என்பதை உணர்ந்து அவற்றை சகித்துக்கொள்ளப் பழகுவதே மனிதனின் வாழ்க்கைத் திறனாகும்.

❋ பலனை எதிர்பாராது கருமஞ் செய்வதும், எமது வாழ்வு சுயநலத்து மட்டுமல்லாது பிறர்க்குமுரியது என்று எண்ணி பிறர்க்கு எமது வாழ்வை அர்ப்பணிப்பதுமே பற்றற்ற சேவையாகும்.

இம்மாத விசேடம்

## ஆருத்ரா தரிசனம்:-

மார்கழிமாதத் திருவாதிரை நட்சத்திரம் (இறைவனுக்கு) நடராஜ மூர்த்திக் குரியதாகும். வருடத்தில் ஆறு அபிஷேககாலங்களிலும் இத் திருவாதிரை நன்னாள் புனிதமும் சிறப்புமுடையதாகும்' உதயகாலத்திற்கு முன் நடு இரவு முதல் நான்காம் சாமம் முடியும் வரை அபிஷேகத் திரவியங்களினால் நனைந்து குளிர்ச்சி பெற்ற நடராஜப் பெருமான் உதயத்தில் சிவகாமி அம்பாள் சமேதராக ஆன்மாக்களுக்கு — பக்தர்களுக்குத் திவ்விய தரிசனத்தைக் கொடுக்கிறார் இத்தினம் திருவாதிரை நாளாகும். இதையே ஆருத்திரா தர்சனம் என்று இந்துக்கள் அழைப்பதுடன் நோன்பிருந்து இறைவனிடம் வரங்களும் பெற்று நற்பேறடைகின்றனர்.

## மார்கழிப்பிள்ளையார்:-

மார்கழிமாதம் முழுவதும் அனேகமாக எல்லா இந்துக்களும் தத்தம் வீட்டுவாசலில் சாணமிட்டு மெழுகி அழகழகான கோலமிட்டு நடுவில் சாணத்தினால் பிள்ளையார் உருவம் வைத்து அதில் அறுகு நுனியும் சாத்து விநாயகப் பெருமானை மார்கழிப்பிள்ளையாராக வழிபட்டு வருகின்றனர். அதிகாலையிலேயே வீட்டு முற்றங்களில் காணப்படும் கோலங்களுடன் மிளிரும் அழகையும், பிள்ளையாரையும் வீட்டுக்கு வருவோரும், வீட்டிலிருந்து வெளியே செல்வோரும் தரிசித்துக் கொள்வதால் உடலும் உள்ளமும் நல்லனவையே நினைப்பதும் நல்லவையே செய்வதும் கைகூடுகின்றது. இவ்வாறு மார்கழி மாத நாள்தோறும் முற்றத்திலிடும் சாணகப்பிள்ளையார் உருவங்களை மாதமுடிவில் ஒன்று சேர்த்து நீர் நிலைகளில் இட்டு விடுவது வழமையாக நடைபெறுகிறது.

# சுக்ல வருஷ மார்கழி மாத கிரக நிரயன ஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5-30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனாம்சம் 23 பா 43கலை 8விகலை)

| தேதி டிச | தேதி மார் | நாக்ஷத்ர நேர பகல் 12-00 (ம நி. செ) | சூரியன் ☉ (ரா பா க) | சந்திரன் ☽ (ரா பா க) | செவ்வாய் ♂ (ரா பா க) | புதன் ☿ (ரா பா க) | குரு ♃ (ரா பா க) | சுக்கிரன் ♀ (ரா பா க) | சனி ♄ (ரா பா க) | ராகு ☊ (ரா பா க) | யுரேனஸ் ♅ (ரா பா க) | நெப்டி ♆ (ரா பா க) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | 17 39 31 | 8 0 17 | 3 13 48 | 7 4 45 | 8 18 34 | 2 13 39 | 9 9 24 | 8 20 1 | 9 25 36 | 8 11 5 | 8 17 42 |
| 17 | 2 | 17 43 28 | 1 18 | 3 27 1 | 5 27 | 19 57 | 13 31 | 9 51 | 20 8 | 25 32 | 11 8 | 17 44 |
| 18 | 3 | 17 47 24 | 2 19 | 4 9 48 | 6 8 | 21 18 | 13 23 | 10 17 | 20 15 | 25 29 | 11 12 | 17 46 |
| 19 | 4 | 17 51 21 | 3 20 | 4 22 14 | 6 50 | 22 37 | 13 15 | 10 40 | 20 22 | 25 25 | 11 15 | 17 49 |
| 20 | 5 | 17 55 17 | 4 21 | 5 4 24 | 7 32 | 23 53 | 13 7 | 11 2 | 20 28 | 25 21 | 11 19 | 17 51 |
| 21 | 6 | 17 59 14 | 5 22 | 5 16 22 | 8 13 | 25 6 | 12 59 | 11 21 | 20 35 | 25 18 | 11 22 | 17 53 |
| 22 | 7 | 18 03 11 | 6 23 | 5 28 14 | 8 55 | 26 16 | 12 51 | 11 39 | 20 42 | 25 15 | 11 26 | 17 55 |
| 23 | 8 | 18 7 7 | 7 25 | 6 10 5 | 9 37 | 27 21 | 12 43 | 11 55 | 20 49 | 25 12 | 11 30 | 17 58 |
| 24 | 9 | 18 11 4 | 8 26 | 6 21 58 | 10 19 | 28 22 | 12 35 | 12 8 | 20 56 | 25 9 | 11 33 | 18 0 |
| 25 | 10 | 18 15 0 | 9 27 | 7 3 57 | 11 1 | 29 18 | 12 27 | 12 20 | 21 3 | 25 6 | 11 37 | 18 2 |
| 26 | 11 | 18 18 57 | 10 28 | 7 16 6 | 11 43 | 9 0 7 | 12 19 | 12 29 | 21 10 | 25 3 | 11 40 | 18 4 |
| 27 | 12 | 18 22 53 | 11 29 | 7 28 24 | 12 25 | 0 49 | 12 10 | 12 36 | 21 17 | 25 0 | 11 44 | 18 7 |
| 28 | 13 | 18 26 50 | 12 30 | 8 10 54 | 13 7 | 1 24 | 12 2 | 12 39 | 21 24 | 24 56 | 11 48 | 18 9 |
| 29 | 14 | 18 30 46 | 13 32 | 8 23 36 | 13 49 | 1 49 | 11 54 | 12 42 | 21 31 | 24 53 | 11 51 | 18 11 |
| 30 | 15 | 18 34 43 | 14 33 | 9 6 29 | 14 31 | 2 5 | 11 46 | 12 42 | 21 38 | 24 50 | 11 55 | 18 13 |
| 31 | 16 | 18 38 40 | 8 15 34 | 9 19 34 | 7 15 13 | 9 2 10 | 2 11 38 | 9 12 39 | 8 21 46 | 9 24 47 | 8 11 59 | 8 18 16 |
| ஜனவரி 1990 1 | 17 | 18 42 36 | 8 16 34 | 10 2 49 | 7 15 55 | 9 2 4 | 2 11 39 | 9 12 33 | 8 21 52 | 9 24 44 | 8 12 2 | 8 18 18 |
| 2 | 18 | 18 46 32 | 17 36 | 10 16 17 | 16 38 | 1 46 | 11 21 | 12 25 | 21 59 | 24 41 | 12 5 | 18 20 |
| 3 | 19 | 18 50 28 | 18 37 | 10 29 58 | 17 20 | 1 16 | 11 13 | 12 15 | 22 6 | 24 38 | 12 9 | 18 22 |
| 4 | 20 | 18 54 24 | 19 38 | 11 13 50 | 18 2 | 0 35 | 11 4 | 12 2 | 22 14 | 24 35 | 12 12 | 18 24 |
| 5 | 21 | 18 58 20 | 20 39 | 11 27 55 | 18 44 | 8 29 43 | 10 57 | 11 47 | 22 21 | 24 32 | 12 16 | 18 27 |
| 6 | 22 | 19 2 16 | 21 40 | 0 12 11 | 19 27 | 28 41 | 10 49 | 11 29 | 22 28 | 24 29 | 12 20 | 18 29 |
| 7 | 23 | 19 6 12 | 22 41 | 0 26 35 | 20 9 | 27 31 | 10 41 | 11 9 | 22 35 | 24 26 | 12 23 | 18 31 |
| 8 | 24 | 19 10 8 | 23 43 | 1 11 4 | 20 52 | 26 15 | 10 33 | 10 44 | 22 42 | 24 23 | 12 27 | 18 34 |
| 9 | 25 | 19 14 4 | 24 44 | 1 25 33 | 21 34 | 24 55 | 10 26 | 10 21 | 22 49 | 24 20 | 12 30 | 18 36 |
| 10 | 26 | 19 18 0 | 25 45 | 2 9 55 | 22 17 | 23 35 | 10 18 | 9 54 | 22 56 | 24 17 | 12 34 | 18 38 |
| 11 | 27 | 19 21 56 | 26 46 | 2 24 5 | 22 59 | 22 16 | 10 10 | 9 26 | 23 3 | 24 14 | 12 37 | 18 40 |
| 12 | 28 | 19 25 52 | 27 47 | 3 21 29 | 23 42 | 21 2 | 10 3 | 8 55 | 23 10 | 24 11 | 12 41 | 18 43 |
| 13 | 29 | 19 29 48 | 8 28 48 | 4 4 40 | 7 24 44 | 8 19 53 | 2 9 56 | 9 8 23 | 8 23 18 | 9 24 8 | 8 12 44 | 8 18 45 |

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (மார்கழி மாதம் 1-ந் தேதி முதல் 29-ந் தேதிவரை)

(சூரிய உதயம் 6 மணி 22 நிமிஷம்)

| வாரம் | 6...22 7...22 | 7...22 8...22 | 8...22 9...22 | 9...22 10...22 | 10...22 11...22 | 11...22 12...22 | 12...22 1...22 | 1...22 2...22 | 2...22 3...22 | 3...22 4...22 | 4...22 5...22 | 5...22 6...22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# நாள் நலமா?

மார் 1 சனி (16-12-89) சதுர்த்தி பகல் 2-14 வரை பூசம் - சித்தம் பகல் 10-38 வரை அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 9-22—10-49

மார் 2 ஞாயி (17-12-89) பஞ்சமி பகல் 2-10 வரை ஆயிலியம் சித்தம் பகல் 11-03 வரை அசுபதினம். ராகு 4-52—6-19

மார் 3 திங் (18-12-89) ஷஷ்டி பகல் 2-56 வரை மகம் - மரணம் பகல் 12-16 வரை சுபதினமன்று. ராகு 7-53—9-20

மார் 4 செவ் (19-12-89) ஸப்தமி மாலை 4-26 வரை பூரம் பகல் 2-12 வரை அசுபதினம். ராகு 3-24—4-51

மார் 5 புத (20-12-89) அஷ்டமி மாலை 6-33 வரை உத்தரம் மாலை 4-42 வரை அமிர்தசித்தம் சுபதினமன்று. ராகு 12-24—1-51

மார் 6 வியா (21-12-89) நவமி இரவு 9-00 வரை அத்தம் மாலை 7-34 வரை சித்தம், கரிநாள் சுபதினமல்ல ராகு 1-54—3-21

மார் 7 வெள் (22-12-89) தசமி இரவு 11-36 வரை சித்திரை - மரணம் இரவு 10-35 வரை அசுபதினம் ராகு 10-55—12-22

மார் 8 சனி (23-12-89) ஏகாதசி பி.இ. 2-07 வரை சுவாதி பி.இ. 1-32 வரை அமிர்தசித்தம் ஸர்வ ஏகாதசி விரதம் நற்கருமங்கட்கு உகந்தது. ராகு 9-25—10-52

மார் 9 ஞாயி (24-12-89) துவாதசி பி.இ. 4-24 வ. விசாகம் பி.இ. 4-16 வரை மரணம், கரிநாள், அசுபதினம். ராகு 4-56—6-23

மார் 10 திங் (25-12-89) திரயோதசி பி.இ. 6-20வ. அனுஷம் முழுவதும் சித்தம் பிரதோஷ விரதம் சுபகருமங்கட்கு உகந்தது. ராகு 7-57—9-24

மார் 11 செவ் (26-12-89) சதுர்த்தசி முழுவதும், அனுஷம் - சித்தம் காலை 6-38 கரிநாள். ராகு 3-27—4-54

மார் 12 புத (27-12-89) சதுர்த்தசி காலை 7-48வ. கேட்டை - சித்தம் காலை 8-36 வரை அமாவாசை விரதம் அசுபதினம். ராகு 12-27—1-54

மார் 13 வியா (28-12-89) அமாவாசை காலை 8-50வ மூலம் பகல் 10-08 வரை சித்தம். கர்ப்போட்ட ஆரம்பம் அசுபதினம். ராகு 1-58—3-25

மார் 14 வெள் (29-12-89) பிரதமை காலை 9-27வ பூராடம் - மரணம் பகல் 11-16 வரை சந்திர தரிசனம் அசுபதினம். ராகு 10-58—12-25

மார் 15 சனி (30-12-89) துவிதியை - சித்தம் காலை 9-38 வரை உத்தராடம் பகல் 12-00 வரை சுப கருமங்கட்கு உகந்தது. ராகு 9-28—10-55

மார் 16 ஞாயி (31-12-89) திரிதியை காலை 9-27வ. திருவோணம் - அமிர்தம் பகல் 12-22 வரை சதுர்த்திவிரதம் நற்கருமங்கட்கு நன்று. ராகு 4-59—6-26

மார் 17 திங் (1-1-90) சதுர்த்தி காலை 8-54 வரை அவிட்டம் பகல் 12-22 வரை சித்தம். திருவெம்பாவை ஆரம்பம். ராகு 7-59—10-26

மார் 18 செவ் (2-1-90) பஞ்சமி காலை 7-59 வரை சதயம் பகல் 12-01 வரை மரணம் விநாயக ஷஷ்டி விரதம் அசுபதினம் ராகு 3-30—4-57

மார் 19 புத (3-1-90) ஷஷ்டி - மரணம் காலை 6-43வ ஸப்தமி பி.இ. 5-06 வரை பூரட்டாதி பகல் 11-20 வரை அசுபதினம் ராகு 12-31—1-58

மார் 20 வியா (4-1-90) அஷ்டமி பி.இ. 3-10 வரை உத்தரட்டாதி பகல் 10-19 வரை சித்தம், சுபதினமல்ல. ராகு 1-51—3-18

மார் 21 வெள் (5-1-90) நவமி பி.இ. 12-58 வ. ரேவதி காலை 8-59 வரை அமிர்தம் அசுபதினம் ராகு 11-01—12-28

மார் 22 சனி (6-1-90) தசமி - சித்தம் இரவு 10-33வ அசுவினி காலை 7-24 வரை பரணி - மரணம் பி.இ. 5-36, அசுபதினம். ராகு 9-32—10-59

மார் 23 ஞாயி (7-1-90) ஏகாதசி இரவு 7-56 வரை கார்த்திகை பி.இ. 3-42 வரை சித்தம் கார்த்திகை விரதம், வைகுண்ட ஏகாதசி சுபதினமன்று. ராகு 5-02—6-29

மார் 24 திங் (8-1-90) துவாதசி மாலை 5-18 வரை ரோகிணி பி.இ. 1-47 வரை அமிர்தசித்தம் பிரதோஷவிரதம் நற்கருமங்கட்கு நன்று. ராகு 8-02—9-29

மார் 25 செவ் (9-1-90) திரயோதசி பகல் 2-46 வ, மிருகசீரிடம் சித்தம் இரவு 12-01 வரை ராகு 3-33—5-00

மார் 26 புத (10-1-90) சதுர்த்தசி பகல் 12-26 வ. திருவாதிரை இரவு 10-31 வரை சித்தம், பூரணை ஆர்த்ராதரிசனம் அசுபதினம். ராகு 12-34—2-01

மார் 27 வியா (11-1-90) பூரணை பகல் 10-27 வரை புனர்பூசம் இரவு 9-25 வரை அமிர்தசித்தம் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 2-04—3-31

மார் 28 வெள் (12-1-90) பிரதமை காலை 8-57 வ. பூசம் இரவு 8-50 வரை மரணம் அசுபதினம் ராகு 11-04—12-31

மார் 29 சனி (13-1-90) துவிதியை காலை 8-03 வ. ஆயிலியம் - மரணம் இரவு 8-54 வரை சுபதின மன்று. ராகு 9-34—11-01

---

## பாவை நோன்பு

மார்கழி மாதத் திருவாதிரை நட்சத்திரத் திற்கு முன் ஒன்பது தினங்களும் பாவை நோன்புக் காலமாகும் திருவெம்பாவை என மணிவாசகப் பெருமானால் சிறப்பித்துக் கூறப்படும் இந்நோன்பு முக்கியமாக பெண்களுக்கு உரியதாகும். இக் காலங்களில் இறைவனை சத்திவடிவமாக வியந்து பாடியாடுவதே எம்பாவை நோன்பாகும்.

பெண்கள், சீதப்புனலாடி, சிற்றம்பலம்பாடி வேதப்பொருள்பாடி சோதிதிறம்பாடி, (இறைவ னின்) பாதத்திறம்பாடி அருள் சிறப்பை வியந்து பேசற்றுவதே எம்பாவாயின் கூற்றாகும்.

## விநாயகசஷ்டி விரதம்

கார்த்திகைமாத கிருஷ்ணபக்ஷப் பிரதமையில் தொடங்கிய விநாயகவிரதம் எனும் பெருங்கதை முடிவு மார்கழி மாதச்சஷ்டித் திதியாக விநாய சஷ்டி விரததினமாகும். சஷ்டியை இறுதியாகக் கொண்ட இத்தினத்திற்கு முன்னுள்ள இருபது நாட்களும் ஒருபொழுது மட்டும் உணவு கொண்டு சஷ்டியிலன்று உபவாசம் இருந்து மறுநாள் பாரணை செய்வதும் இவ்விரத நோன்பாகும். இக்காலங்களில் விநாயகப் பெருமானுக்கு மிகவும் பிரியமான எள்ளுப் பொரி, தேன், அவல், அப்பம், வள்ளிக்கிழங்கு, மாம்பழம் முதலியபழ வகை பால், மோதகம் முதலிய நிவேதனங்களை நிவேதித்து ஆராதிப்பதும், பெருங்கதை விநாய கர் புராணம், விநாயகர் கவசம் முதலியவற்றைப் பாராயணம் செய்வதும் விரதகாரரின் நியமங்க ளாகும். விரத ஆரம்பத்தில் இருபத்தோரிழை கொண்ட நூல்காப்பைக்கட்டி விரதமிருந்து முடி வில் பாரணையின் மறுநாள் இக்காப்பை அவிழ்த்து விடுவதும் இருபத்தொரு வருடங்கள் தொடர்ந்து அனுட்டிப்பதும் விரத முறைகளாகும்.

---

வாங்கி விட்டீர்களா?

திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர்

ரூபா 20/- மட்டுமே!

---

## தனு லக்கின ஆணும் கன்னி லக்கினப் பெண்ணும் சேர்வது நன்மையானதா?

தனுவின் சுவாரஸ்யமும், வெளிப்படைப்பேச்சும், உற்சாகமும் கன்னிக்காரிக்கு மிகவும் விருப்பமாயிருக்கும். இயற்கையில் அவள் பொறுமைக் குணம் இல்லாதவளாகவிருந்தாலும் தனுகாரர் இவ்வுணர்ச்சிகளை கிளப்பிவிடவல்லவர். தன் கணவர் வாழ்வில் தான்தான் ஒரே ஒரு பெண் என்பது அவள் விருப்பம். ஆனால் அன்பென்றால், அழகென்றால், காதலென்றால் ஒருவர் தம்முடன் மற்றவர்கட்குத் தொடாமல் வைத்திருக்கும் பொருளல்லவென்பது அவன் கருத்து. அவளுக்கு பொருளாதார உத்தரவாதம் மிகமுக்கியமானது. நாளைவரும் செலவினங்களைப்பற்றியோ பொருளா தாரத்தைப் பற்றியோ சிந்தனைசெய்ய அவனுக்கு அவகாசமில்லை. இந்த மனப்பான்மையால் இது நடக்காது என்ற கனவுகளையெல்லாம் அவன் களைத்துவிடுவான். அவனுடைய அதிஷ்டத்திற்கு அவை சாதகமாயிருக்கும். இந்நேரங்களில் அவனுடைய அதிஷ்டங்களில் அவள் சந்தோஷப்படுகினும் சிலவேளைகளில் நச்சரிப்பாள் ஏனெனில் சிறு பொருளாதார நன்மைக்கு மிகவும் பாடுபடுவாள்.

வெளியிட அலுவல்களில் இருவருக்கும் இருக்கும் ஆர்வம் இருவரையும் தற்காலிகமாக ஒன்று கூட்டும். இருவருக்கும் விருப்பமுள்ள பிரயாணத்தை இருவரும் பகிர்ந்துகொள்வார்கள். ஆனால் கூட்டுறவை கணிப்பதற்கு இவைகள் சிறு சிறு அலுவல்கள். அவன் தன் ஆண் நண்பர்களுடன் சீட்டாட்டத்திலும், பிலியட் ஆட்டத்திலும் ஈடுபடும் நேரங்கள் சாயந்தர நேரங்களை அவள் ஏகாந்தமாகவே கழிப்பாள். இவைகளில் அவன் ஈடுபடுவதை அவள் ஊக்கத்துடன் ஆதரிப்பாள். ஏனெனில் இவைகளில் அவன் ஈடுபடாவிட்டால் அவன் வேறு கவர்ச்சியான பெண்களைத்தேடிக் கலைத்துத் திரிவான் என்பதிற்காக.

கன்னி லக்கினகாரி உடலுறவில் அவ்வளவு அக்கறை கொள்வதில்லை. காலத்துக்குக் காலம் அவர் காதல் செய்பவராதலால் இவ்வுணர்ச்சிகளை அவளில் எழுப்பிவிட இருவருக்கும் முடியும். வேறு பெண்கள் என்னும் பிரச்சினை இருக்கவே இருக்கும். இதை அவள் தாங்கிக்கொள்ள வேண்டும். அல்லது இவரை மறந்து விடவேண்டும். நல்ல ஒரு உறவல்ல. — வே.சி. நல்லூர்


# உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

சுக்ல ஸ்ரீ மார்கழி மீ 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை. (16-12-89 முதல் 13-01-90 வரை)

| இங் டிசம் | தமி மார் | வாரம் | தனுசு ம.மி. முதல் (காலை) | தனுசு ம.மி. வரை (காலை) | மகரம் ம. மி. வரை (காலை) | கும்பம் ம. மி. வரை (பகல்) | மீனம் ம. மி. வரை (பகல்) | மேடம் ம. மி. வரை (பி.ப) | இடபம் மி. ம. வரை (மாலை) | மிதுனம் ம. மி. வரை (இரவு) | கடகம் ம. மி. வரை (இரவு) | சிங்கம் ம. மி. வரை (இரவு) | கன்னி ம. மி. வரை (பி.இ) | துலா ம. மி. வரை (பி.இ) | விருச்சி ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | சனி | 6 19 | 8 29 | 10 25 | 12 9 | 1 52 | 3 41 | 5 44 | 7 55 | 10 3 | 12 3 | 2 2 | 4 6 | 6 17 |
| 17 | 2 | ஞாயி | 6 17 | 8 24 | 10 20 | 12 4 | 1 47 | 3 36 | 5 39 | 7 50 | 9 58 | 11 58 | 1 57 | 4 1 | 6 12 |
| 18 | 3 | திங் | 6 12 | 8 21 | 10 17 | 12 1 | 1 44 | 3 33 | 5 36 | 7 47 | 9 55 | 11 55 | 1 54 | 3 58 | 6 9 |
| 19 | 4 | செவ் | 6 9 | 8 18 | 10 14 | 11 58 | 1 41 | 3 30 | 5 33 | 7 44 | 9 52 | 11 52 | 1 51 | 3 55 | 6 6 |
| 20 | 5 | புதன் | 6 6 | 8 13 | 10 9 | 11 53 | 1 36 | 3 25 | 5 28 | 7 39 | 9 47 | 11 47 | 1 46 | 3 50 | 6 1 |
| 21 | 6 | வியா | 6 1 | 8 9 | 10 5 | 11 49 | 1 32 | 3 21 | 5 24 | 7 35 | 9 43 | 11 43 | 1 42 | 3 46 | 5 57 |
| 22 | 7 | வெள் | 5 57 | 8 5 | 10 1 | 11 45 | 1 28 | 3 17 | 5 20 | 7 31 | 9 39 | 11 39 | 1 38 | 3 42 | 5 53 |
| 23 | 8 | சனி | 5 53 | 8 1 | 9 7 | 11 41 | 1 24 | 3 13 | 5 16 | 7 27 | 9 35 | 11 35 | 1 34 | 3 38 | 5 49 |
| 24 | 9 | ஞாயி | 5 49 | 7 57 | 9 53 | 11 37 | 1 20 | 3 9 | 5 12 | 7 23 | 9 31 | 11 31 | 1 30 | 3 34 | 5 45 |
| 25 | 10 | திங் | 5 45 | 7 50 | 9 50 | 11 34 | 1 17 | 3 6 | 5 9 | 7 20 | 9 28 | 11 28 | 1 27 | 3 31 | 5 42 |
| 26 | 11 | செவ் | 5 42 | 7 46 | 9 46 | 11 30 | 1 13 | 3 2 | 5 5 | 7 16 | 9 24 | 11 24 | 1 23 | 3 27 | 5 38 |
| 27 | 12 | புதன் | 5 38 | 7 43 | 9 42 | 11 26 | 1 9 | 2 58 | 5 1 | 7 12 | 9 20 | 11 20 | 1 19 | 3 23 | 5 34 |
| 28 | 13 | வியா | 5 34 | 7 38 | 9 39 | 11 23 | 1 6 | 2 55 | 4 58 | 7 9 | 9 17 | 11 17 | 1 16 | 3 20 | 5 31 |
| 29 | 14 | வெள் | 5 31 | 7 34 | 9 34 | 11 18 | 1 1 | 2 50 | 4 53 | 7 4 | 9 12 | 11 12 | 1 11 | 3 15 | 5 26 |
| 30 | 15 | சனி | 5 26 | 7 30 | 9 30 | 11 14 | 12 57 | 2 46 | 4 49 | 7 0 | 9 8 | 11 8 | 1 7 | 3 11 | 5 22 |
| 31 | 16 | ஞாயி | 5 22 | 7 26 | 9 26 | 11 10 | 12 53 | 2 42 | 4 45 | 6 56 | 9 4 | 11 4 | 1 3 | 3 7 | 5 18 |
| ஜனவரி 1990 | | | | | | | | | | | | | | | |
| 1 | 17 | திங் | 5 18 | 7 26 | 9 22 | 11 6 | 12 40 | 2 38 | 4 41 | 6 52 | 9 0 | 11 0 | 12 59 | 3 3 | 5 14 |
| 2 | 18 | செவ் | 5 14 | 7 23 | 9 19 | 11 3 | 12 46 | 2 35 | 4 38 | 6 49 | 8 57 | 10 57 | 12 56 | 3 0 | 5 11 |
| 3 | 19 | புதன் | 5 11 | 7 20 | 9 16 | 11 0 | 12 43 | 2 32 | 4 35 | 6 46 | 8 54 | 10 54 | 12 53 | 2 57 | 5 8 |
| 4 | 20 | வியா | 5 8 | 7 15 | 9 11 | 10 55 | 12 38 | 2 27 | 4 30 | 6 41 | 8 49 | 10 49 | 12 48 | 2 52 | 5 3 |
| 5 | 21 | வெள் | 5 3 | 7 11 | 9 7 | 10 51 | 12 34 | 2 23 | 4 26 | 6 37 | 8 45 | 10 45 | 12 44 | 2 48 | 4 49 |
| 6 | 22 | சனி | 4 59 | 7 7 | 9 3 | 10 47 | 12 30 | 2 19 | 4 22 | 6 33 | 8 41 | 10 41 | 12 40 | 2 44 | 4 55 |
| 7 | 23 | ஞாயி | 4 55 | 7 3 | 8 59 | 10 43 | 12 26 | 2 15 | 4 18 | 6 29 | 8 37 | 10 37 | 12 36 | 2 40 | 4 51 |
| 8 | 24 | திங் | 4 51 | 6 59 | 8 55 | 10 39 | 12 22 | 2 11 | 4 14 | 6 25 | 8 33 | 10 33 | 12 32 | 2 36 | 4 47 |
| 9 | 25 | செவ் | 4 47 | 6 55 | 8 51 | 10 35 | 12 18 | 2 7 | 4 10 | 6 21 | 8 29 | 10 29 | 12 28 | 2 32 | 4 43 |
| 10 | 26 | புதன் | 4 43 | 6 51 | 8 47 | 10 31 | 12 14 | 2 3 | 4 6 | 6 17 | 8 25 | 10 25 | 12 24 | 2 28 | 4 39 |
| 11 | 27 | வியா | 4 39 | 6 47 | 8 43 | 10 27 | 12 10 | 1 59 | 4 2 | 6 13 | 8 21 | 10 21 | 12 20 | 2 24 | 4 35 |
| 12 | 28 | வெள் | 4 35 | 6 43 | 8 39 | 10 23 | 12 6 | 1 55 | 3 58 | 6 9 | 8 17 | 10 17 | 12 16 | 2 20 | 4 31 |
| 13 | 29 | சனி | 4 31 | 6 39 | 8 35 | 10 19 | 12 2 | 1 51 | 3 54 | 6 5 | **8 13** | **10 13** | 12 12 | 2 16 | 4 27 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: மார்கழி 29 உ (13-01-90) இரவு 10.00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (8-13—10-13) சிங்கலக்னம்

# மார்கழி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

10உ (25-12-89) பி.இ.2-03க்கு மக-புத
20உ (4-1-90) இரவு 10-03க்கு தனு-புத
18உ புதன் வக்கிராரம்பம்
20உ புதன் அஸ்தமனம்
15உ சுக்கிரன் வக்கிராரம்பம்
7உ சனி அஸ்தமனம்
குரு இம்மாதம் வக்கிரத்தில் சஞ்சரிக்கின்றது

## சந்திரனது இராசிநிலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மார்: 2உ | (17-12-89) | பகல் | 11-03 | முதல் | சிங்கம் |
| 4உ | (19-12-89) | இரவு | 8-46 | ,, | கன்னி |
| 7உ | (22-12-89) | காலை | 9-05 | ,, | துலாம் |
| 9உ | (24-12-89) | இரவு | 9-36 | ,, | விருச்சிகம் |
| 12உ | (27-12-89) | காலை | 8-35 | ,, | தனுசு |
| 14உ | (29-12-89) | மாலை | 5-29 | ,, | மகரம் |
| 16உ | (31-12-89) | இரவு | 12-24 | ,, | கும்பம் |
| 19உ | (2-1-90) | பி.இ | 5-32 | ,, | மீனம் |
| 20உ | (4-1-90) | காலை | 8-59 | ,, | மேடம் |
| 23உ | (7-1-90) | பகல் | 11-07 | ,, | இடபம் |
| 25உ | (9-1-90) | பகல் | 12-52 | ,, | மிதுனம் |
| 27உ | (11-1-90) | பகல் | 3-38 | ,, | கடகம் |
| 29உ | (13-1-90) | இரவு | 8-54 | ,, | சிங்கம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி மார் மீ 29 உ இரவு 10-00 மணிக்கு சிங்க லக்னம் என அறிந்து கொண்ட பின் "சிங்கம்" என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும் போது சிங்கலக்கினம் உதயமாகிறது. லக்கினதிபதி திரிகோணத்தில் சனியுடன் சம்பந்தப்படுகின்றது எனவே சிக்கல்கள் நிறைந்து காணப்படும். 6-ல் ராகு இருப்பதால் அரசுக்கு மறை முகமாக எதிரிகள் இயங்கிக் கொண்டிருப்பர். 11-ல் குரு இருப்பதால் சமய விடயங்களில் மக்களுக்கு நாட்டம் அதிகரிக்கும். நாட்டில் வன்முறை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

# மார்கழி மாத வானியற் காட்சிகள்

# Astronomical Phenomena

16-12-89 — 13-01-90

சூரியன்:- 15 12-89 இரவு 10-40 தனு ராசிப்பிர
16-12-89 உதயம் காலை 6-22 [வேசம்.
16 12-89 உச்சம் பகல் 12-05
16 12-89 அஸ்தமனம் மாலை 5-49
31-12-89 உதயம் காலை 6-29
31-12-89 உச்சம் பகல் 12-13
31-12-89 அஸ்தமனம் மாலை 5 56

சந்திரன்:- 28 12-89 அமாவாசை காலை 8-50
29-12-89 சந்திரதரிசனம்
11-1-90 பூரணை பகல் 10-27

## கிரகங்கள்

புதன்:- மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் காணப்படும் இக்கிரகம் 23-12-89ல் சூரியனிலிருந்து கூடிய தூரம் சென்று 20பாகை உயரத்தில் தோன்றும். அதன்பின் உயரம் படிப்படியாகக் குறைந்து 2-1-90ல் வக்கிரகதியடையும். 4-1-90ல் மேற்கில் அஸ்தமனமடையும். 25-12-89ல் மகரராசியில் பிரவேசித்த இக்கிரகம் வக்கிரகதியில் 4-1-90ல் தனுராசிக்கு வரும்.

சுக்கிரன்:- மாதாரம்பத்தில் சூரியஅஸ்தமனத்தின் பின் மேற்குவானில 40 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 10 பாகை உயரத்தில் தோன்றும். 30-12 89ல் வக்கிரகதியில் செல்லத்தொடங்கும்.

செவ்வாய்:- மாதத்தொடக்கத்தில் சூரிய உதயத்தின் முன் கிழக்குவானில் 25பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 44 பாகை உயரத்தில் தோற்றும். இம்மாதம் முழுவதும் விருச்சிக ராசியில் சஞ்சரிக்கிறது.

வியாழன்:- மாதாரம்பத்தில் சூரியன் உதயமாகும்போது மேற்குவானில் 14பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் 27-12-89ல் சூரியோதயத்தின்போது மேற்கில் அஸ்தமனமடையும். அதன் மேல் சூரிய அஸ்தமனத்தின் பின் கிழக்குவானில் தோற்றத்தொடங்கி மாதமுடிவில் 19பாகை உயரத்தில் காணப்படும்.

சனி:- மாதாரம்பத்தில் சூரியஅஸ்தமனத்தின் பின் மேற்குவானில 21பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் 22-12-89ல் மேற்கில் அஸ்தமனமடையும். இம்மாதம் முழுவதும் தனுராசியிலேயே சஞ்சரிக்கிறது.

யுரேனஸ்:- தனுராசியில் சஞ்சரிக்கிறது.
நெப்டியூன்:- தனுராசியில் சஞ்சரிக்கிறது.
புளுட்டோ:- துலாராசியில் சஞ்சரிக்கிறது.

## சமாகமங்கள்

17-12-89 காலை புதனுக்கு வடக்கு சனி 2½ பாகை அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் நுட்பமாக அவதானிக்கவும்.

25 12-89 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கு செவ்வாய் 5பாகை. சந்திரோதயத்தின் பின் அவதானிக்கலாம்.

26 12 89 அதிகாலை கேட்டை நட்சத்திரம் சந்திரனல் மறைக்கப்படும்.

28-12-89 இரவு சந்திரனுக்கு வடக்கு சனி 3பாகை. அன்று பிரதமை திதியாதலால் சந்திரன் தோற்றாது.


30-12-89 மாலை சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 2½பாகை. சூரிய அஸ்தமனத்தின் பின் அவதானிக்கலாம்.

10-1 90 காலை சந்திரனுக்குத் தெற்கு வியாழன் 3½பாகை உதயத்தின் முன் அவதானிக்க.

## 'பவானிக்கு' அஞ்சலி!

"சோதிடமலரில்" பவானி என்னும் புனைபெயரில் பல கட்டுரைகளை வழங்கி வாசகர்களின் பாராட்டைப் பெற்று மலரின் வளர்ச்சியில் பங்குவகித்த பருத்தித்துறையூர் திரு. சிவபாதம் R. M. P. அவர்கள் அண்மையில் அமரரர்கிவிட்ட செய்தியினை மிக்க விநயத்துடன் தெரிவிக்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

அன்னாருக்கு ஆசிரியர், எழுத்தாளர், வாசகர்கள் சார்பில் சோதிடமலர் தனது இதய அஞ்சலியைத் தெரிவிக்கிறது. ஆ-ர்




இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

**16-12-89 முதல் 13-01-90 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு விதமேகிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதைமனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.

## மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 9ல் லோகமூர்த்தியாக வலம் வருவதால் தொடர்ந்து நன்மைகள் கலந்த பலன்களே நிகழும். பிரதானமாகக் குருபகவான் குரூரகோசார சஞ்சாரம் செய்வது இவர்களது துரதிஷ்டமே. பொதுவாக இவர்களின் தேகசுகம் குடும்பசுகம் என்பன இடைக்கிடையே பாதிப்படையும். சாதரணமாகப் பொருள் வரவு கணிசமாகக்கூடிக்கொண்டு வரும். என்றாலும் எதிர் பாராத திடீர் நெருக்கடிகள் தவிர்க்க முடியாத சம்பவங்களால் ஏற்படும் செலவுகளுக்கு வருமானத்திலும் கூடுதலாகச் செலவுகள் ஏற்படுதலால் கடன் பயமும் உண்டாகும். அலைச்சல் மூலம் காரிய சித்தியும் பெறுவர். விற்றல் வாங்கல் வகைகளில் லாபம் கிடைக்கும்.

குடும்பத்தில் சிறு சிறு பிணக்குகள் அவ்வப்போது தோன்றி மறையும். புத்திரர் உறவினர் முதலியோரின் உதவி ஒத்தாசைகள் கிடைப்பது கடினமே! திடீர் செலவுகளில் கடன் பழுவும் கூடும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவது இந்த மாதமும் வியாபார முன்னேற்றம் தொடரும். எனினும் நிதிநெருக்கடிகளும் உண்டாகும். பொதுவாக எதிர்பார்த்த லாபம் பெறுவது கடினம்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் குன்றுவதால் பலப்பலபிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டிவரும். மேலதிகாரிகளின் கண்டனங்களையும் கோபதாபங்களையும் சகிக்க வேண்டியும் நேரும். வேலை பழுவும் கூடும்.

விவசாயிகளுக்கு இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிர் அழிவு உண்டாகும். உற்பத்திச் செலவுகளும் கூடும். விளைச்சல் குன்றும். விவசாயப்பணிகளிலும் நட்டம் உண்டாம்.

தொழிலாளர் வேலையில்லாப் பிரச்சினைகள் மூலம் கஷ்டமுறுவர். தினச்சம்பளம் பெறுவோருக்கு நாளாந்த சீவியமும் கஷ்டம் தரும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் உண்டாகும்.

மாணவர் கல்விக் குழப்ப நிலை தொடரும். கல்வியைத் தொடர முடியாதபடி முட்டுக்கட்டைகள் அடிக்கடி ஏற்படும். சுயமுயற்சி செய்வதற்கும் முடியாத மனநிலையில் மாணவர் அவதியுறுவர்.

பெண்களுக்கு மனக்கசப்பான காரியங்களைச் செய்ய வேண்டிய அவல நிலைகூட ஏற்படும். விவாகாதி முயற்சிகளும் இழுபறி நிலையில் இருக்கும். குடும்பப் பெண்களுக்கும் மனச்சுமை கூடிவரும்.

அதிஷ்டநாள்:- டிசெ. 18,19,27,28.29பக
ஜன. 1,2,5பக.6,7மு.ப.10
துரதிஷ்டநாள்.- டிசெ. 20,21,25,26.
ஜன. 3கா.4,5கா.



## இடபம்

கார்த்திகை 2,3, ரோகினி, மிருகசீரிடம் 1,2கால்

இடப ராசிக்காரருக்குச் சூரியன் 8ல் தாம்பரமூர்த்தியாக சஞ்சாரம் செய்கிறார். சூரிய பலம் குறைந்தாலும் வியாழபகவான் பலம் பெறுவதால் நன்மை தீமை கலந்த பலன்கள் இந்த மாதம் நிகழும். தேகசுகம் குடும்பசுகம் என்பன பெரும்பாலும் சீராக இருக்கும். பொருள் வருமானம் கூடும். நண்பர்கள் உறவினரின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். காரியசித்தியும் பெறுவர். தனக்கு அல்லது குடும்பத்தில் சுபசோபன நிகழ்வுகளும் இடம் பெறச்சாதகமான மாதம். சனி அட்டமத்தில் சூரியனுடன் சேர்ந்து சஞ்சாரம் செய்வதும் நற்பலன்களைக் குறைத்து சோரசத்துருபயம் விபத்து முதலியனவும் நிகழ்ந்தாலும் ஆச்சரியமில்லை.

குடும்பத்தில் மனநிறைவான சம்பவங்கள் தொடர்ந்து நிகழும். குடும்ப வருமானமும் அதிகரிக்கும். இனசன பந்துக்களின் சுபமங்கள கொண்டாட்டங்களும் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவது வியாபாரச் சிறப்புக்கள் உண்டாகும். முதலீடுகளால் வருமானம் வரத்தொடங்கும். தானிய வகை உணவு வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் குன்றுவதால் மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமைகள் உண்டாகும். வேலைப்பொறுப்புகளும் அதிகரிக்கும். பதவி உயர்ச்சி முதலியனவும் கேள்விக்குறியாக இருக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் அழிவுகள் ஏற்பட்டாலும் விளைச்சல் கூடுதலால் நட்டம் வராது. விவசாயப் பண்ணைகளிலும் லாபம் கிடைக்கும். விளைச்சலுக்கு நல்ல சந்தை வாய்ப்பும் கிட்டும்.

தொழிலாளருக்கு சாதாரணமாக வேலை வசதிகள் கிடைக்கும். தினச்சம்பளம் பெறுவோருக்கும் சீவனத்துக்குப் போதியவருமானம் கிடைக்கும். ஒப்பந்த தொழிலிலும் நல்ல லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் இந்த மாதமும் தொடரும். வங்கித்துறை சட்டத்துறை மாணவர் சிறப்புச் சித்தியும் பெறுவர் சிலருக்கு புலமைப்பரிசில் வெளிநாட்டுக் கல்வி வாய்ப்பும் கிடைக்கலாம்.

பெண்களுக்கு காரிய சித்தி பெறச்சாதகமான காலம். கன்னிப்பெண்களின் விவாக முயற்சிகள் பெரும்பாலும் கைகூடும். சிலருக்கு மங்கல நிகழ்ச்சிகளும் மனநிறைவான சம்பவங்களும் நிகழக்கூடும்.

அதிஷ்டநாட்கள்,- டிசெ. 16,20,21,30,31
ஜன. 3,4,5,கா.8,12,13பக
துரதிஷ்டநாட்கள்:- டிசெ. 22,23,24,27பக,28
5பக,6,7மு.ப



## மிதுனம்

மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

மிதுனராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 7ல் ரஜஸமூர்த்தியாக வலம்வருவது நன்மை தரும். எனினும் குரு-சனி உட்படப் பல கிரகங்களின் கோசாரசஞ்சாரபலம் குறைவதால் பெரும்பாலும் நன்மைதீமை கலந்த பலன்களே நிகழும்.

பொதுவாக இவர்களின் தேகநலம் சீராக இருக்கும். பொருள் வருமானம் சுமாராக அதிகரிக்கும். தேவையற்ற பகைவிரோதங்கள் - இனசனபந்துக்கள் துவேஷம் - பொருள் நட்டம் முதலியனவும் ஏற்படும். இராசாங்க உதவிகள் - முன் தடைப்பட்டிருந்த காரியங்களில் சித்திபெறுதல் - வீட்டுச் சிறப்பு - சோரசத்துரு தொல்லை - புத்திரர் கவலை முதலியனவும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் சிறுசிறு பிணிபீடைகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடிக்கொண்டுபோகும் புத்திரர் முதலியோரின் உதவி ஒத்தாசைகள் கிடைப்பதும் அரிதே!

வர்த்தகர்களுக்குப் புதன் பலம்பெறுவதால் வியாபாரத்தில் படிப்படியாக முன்னேற்றம் உண்டாகும். எனினும் நிதிக்கஷ்டங்களும் ஏற்படும். வாடிக்கையாளரின் வரவும் கூடும்.

உதத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுவது நன்மைதரும். ஆனால் இவர் கோசாரபலம் குன்றுவதால் பதவிஉயர்ச்சி, பதவி உறுதிப்படுத்துதல் முதலியன கேள்விக் குறியாகவே இருக்கும்.

விவசாயிகளுக்குப் பயிருற்பத்திச் செலவுகள் இம்மாதமும் கூடும். ஆனால் கணிசமாக விளைச்சலும் அதிகரிக்கும். விளைச்சலுக்கு நல்ல சந்தை வாய்ப்புக் கிடைப்பதால் நட்டம் வராது.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் கிடைப்பது குன்றும், தினச்சம்பளம் பெறுபவர்களுக்கு நாளாந்த சீவனத்துக்குத் தேவையான வருமானம் கிடைப்பதும் கடினம். தொழில் ஒப்பந்தங்களிலும் லாபம் கிடைப்பதும் கடினம்.

மாணவர் கல்விக் குழப்பநிலை இந்தமாதமும் நீடிக்கும். எனினும் சுயமுயற்சியுடையவர்கள் பரீட்சைகளில் சித்திபெறுவார்கள். பொதுவாக இவர்களின் உடல் உளப்பாதிப்புக்கள்கூடத் துன்பந்தரலாம்.

பெண்களுக்கு விவாகவிஷயங்களில் இழுபறிநிலை தொடர்ந்தாலும் ஆச்சரியமில்லை, குடும்பத்தில் ஏற்படும் திடீர் நெருக்கடிகள் குடும்பப்பெண்களைத் துன்புறுத்தவும் செய்யும்.

அதிஷ்ட நாட்கள், டிசெம். 18,19,22,23,24.
ஜன. 1,2,5,6,10.
துரதிஷ்ட நாட்கள்: டிசெம். 25,26,30,31,
ஜன. 7,8,9.



# கடகம்

புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு சூரியன் 6ல் சுவர்ணமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். கடந்தகாலங்களிலும் பார்க்கத் தேகசுகம் குடும்பசுகம் என்பவற்றில் முன்னேற்றம் உண்டாகும் பொருள் வருமானமும் அதிகரிக்கும். சிலருக்கு அந்நியருதவி, அந்நியதேச சஞ்சாரம், முயற்சிகள் பலிதம், விற்றல் வாங்கல் மூலம் லாபம் முதலியனவும் கிட்டும். குருகோசார சஞ்சாரத்தில் பலம் பெருமையால் அலைச்சல் ஏமாற்றம் புத்திரர் கவலை வயிற்று வியாதி முதலான தீர்ப்பலன்களும் கலந்துநிகழும்.

குடும்பத்தில் நல்லுறவு உண்டாகும். குடும்ப வருமானமும் திருப்திதரும். புத்திரர் உதவிகள் ஒத்தாசைகள் கிடையாது. குரு முதலிய பெரியவர்களால செலவுகளும் பகைவிரோதங்களும் ஏற்படக்கூடும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம்பெறுவதால் இந்தமாதமும் வியாபாரம் சிறப்பாக நடக்கும். கடன் நிலுவைகளை அறவிடுவதில் கஷ்டங்கள் ஏற்படும். வங்கிநிதியிருப்புக்களும் குறைவுறும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம்பெறுவதால் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். பதவிஉயர்ச்சி முதலான சிறப்புக்கள் கூடச் சிலருக்குக் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் குறிப்பிடக்கூடிய அளவுகூடும். விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் கூடும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் உண்டு.

தொழிலாளருக்குச் சாதாரணமாக வேலை வசதிகள் கிடைப்பதுடன் சீவியத்துக்குப் போதிய வருமானமும் பெறுவர். தொழிலாளர் வேலை கொள்ளுவோருக்குள் நல்லிணக்கமும் ஏற்படும்.

மாணவர் கல்வித்தடைக் காரணிகள் வலுவடையும். ஆனால் சுயமுயற்சியால் கல்வியில் தேர்ச்சி பெறமுடியும். உளநிலைப் பாதிப்பால் சிலர் கல்வியைத் தொடராமல் இடைநிறுத்தவும் கூடும்.

பெண்களுக்கு உறவினர் முதலியோரில் கட்டுப்பாடுகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். விவா

காரிய முயற்சிகளிலும் சித்திபெறுவதும் கடினம். பெண்களுக்கு அதிகாரிகள் தயவு கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்: டிசெ. 16,20,21,25,26.
ஜன. 3கா,4,5கா,8,12,13பக

துரதிஷ்டநாட்கள்: டிசெ. 27பக,28,29பக
ஜன. 1,2,10



## சிங்கம்

மகரம், பூரம், உத்தரம் 1ம் கால்

இவ்விராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 5ல் லோகமூர்த்தியாகப் பலக்குறைவுடன் வலம் வருகின்றார். குருபகவான் 11ல் பலத்துடன் சஞ்சாரம செய்கின்றார். பொது வாக இவர்களுக்கு இந்த மாதம் நன்மை தீமை கலந்த பலன்கள் நிகழ வேண்டும். தேகசுகம் குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். இந்த மாதமும் பொருள் வருமானம் கணிசமான அளவு அதிகரிக்கும். வீடுவாகன சிறப்பு புத்திரர் சிறப்பு காரியசித்தி பந்துசன கொண்டாட்டம் பெரியோர் உதவி புண்ணிய யாத்திரை பலன்களும் நிகழும், தசாபுத்தி அந்தரபலம் பெற்றவர்கள் அதிகம் பாதிக்கப்படமாட்டார்கள். எதற்கும் நவக்கிரக தெய்வ வழிபாடுகளால் சாந்திபெற முடியும்.

குடும்பத்தில் சுபமங்கள நிகழ்ச்சிகள் பெரும்பாலும் நிகழும். கணவன் மனைவி நல்லுறவு ஏற்படும். புத்திரர் உறவினர் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு இம்மாதம் வியாபார முன்னேற்றம் தொடரும். பழைய முதலீடுகளில் வருமானம் கூடும், நிலுவைக்கடன்களும் வந்து சேரும். வாடிக்கையாளரின் வரவு மகிழ்வு தரும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து மோதல் அடிக்கடி ஏற்படலாம். சுமக்க முடியாத வேலை பழுவும், வீண் பழிகளும் கூட இவர்களுக்கு கிடைத்தாலும் ஆச்சரியமில்லை

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தியில் செலவுகள் கூடும். பயிர் அழிவும் ஏற்படும். எனினும் விளைச்சலும் கூடுதலால் நட்டம் வராது. விவசாயப்பண்ணைகளிலும் லாபம் கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கு வருமானம் கூடும். தொழிற் பிணக்குகளும் பெரும்பாலும் நீங்கிவிடும். இனசம்பளம் பெறுவோருக்கும் சீவன வசதி உண்டாகும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவர்.

மாணவர் கல்வி முன்னேற்றம் காணும் மாணவர் முழுமுயற்சியுடன் கல்வியில் ஊக்கம் காட்டுவர். சட்டத்துறை - கணித விஞ்ஞானத்துறை மாணவர் சிறப்புச் சித்திகள்கூடப் பெறுவர்.

பெண்களுக்குப் பெரும்பாலும் காரியசித்திகள் கிடைக்கும். விவாகமுயற்சிகள் சாதகமாகவும் அமையும். குடும்பப் பெண்களுக்கும் மகிழ்ச்சியான காலம். உத்தியோகப் பெண்கள் அதிகாரிகளின் கோபத்துக்குள்ளாகவும் கூடும்.

அதிஷ்ட நாட்கள்: டிசெ. 18,19,23,24,28.
ஜன. 5,6,9,10.

துரதிஷ்ட நாட்கள்: டிசெ. 16,17,29,30,31.
ஜன. 3,4,12,13.



## கன்னி

உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2

இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 4ல் சுவர்ணமூர்த்தியாகப் பலத்துடன் வலம்வருவது நன்மை தீமைகள் கலந்த பலன்கள் நிகழும். தேகசுகம் - குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். கடந்த காலங்களிலும் பார்க்க இம்மாதம் பொருள்வருமானம் கூடும். முன்பு தடைதாமதப்பட்டிருந்த காரியங்களில் வெற்றிபெறுவர். இனசனபந்துக்கள் மூலம் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும். விற்றல் வாங்கல் மூலம் லாபங்களும் உண்டாம். புத்திரர்வழிக் கவலை இடப்பிரிவு - அந்நியதேச சஞ்சாரம் - அலைச்சல் - இராசாங்க அதிகாரிகளின் உதவிகள் முதலியனவும் கிடைக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு உண்டாகும். புத்திரர் உதவி ஒத்தாசைகள் கிடைப்பதும் அரிதே! வீட்டில் அல்லது குடும்பத்தில் ஏற்படும் திடீர் நெருக்கடிகள் முதலியவற்றால் சிலருக்கு இடப்பிரிவுகளும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம்பெறுவதால் இம்மாதமும் வியாபார முன்னேற்றம் தொடரும்.

ஆனுல் முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம்வராது. நிலுவைக் கடன்களிலும் சிக்கல்களேற்படும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுவதால் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிட்டும். சிலர் பதவிச் சிறப்புக்கள் கூடப் பெறுவர். ஊழியர்களின் ஒத்துழைப்பும உதவிகளும் பெறுவர்.

விவசாயிகளுக்கு இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிரழிவுகள் ஏற்பட்டாலும் கணிசமாக விளைச்சலும் அதிகரிக்கும். விவசாயப் பண்ணைகளிலும லாபம்வரும். சந்தைவாய்ப்பும் பெறுவர்.

தொழிலாளர் வேலைவசதிகள் பெறுவதால் போதிய வருமானம் பெறுவர். பெரும்பாலும் தொழிற்பிணக்குகள் நீங்கும். இயந்திரத் தொழிற்சாலை வாகனத் தொழிலாளர் வருமானம் கூடும்.

மாணவர் கல்வியில் முன்னேற்றமுண்டு. ஆசிரியர் மாணவர் ஒத்துழைப்பும் ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஏற்படுதலால் கல்விவளர்ச்சி உண்டாகும். பரீட்சைகளிலும் சிறப்புச்சித்தி பெறுவர்.

பெண்களுக்கு தடை தாமதங்களுடன் விருப்புக்களை நிறைவேற்றிக்கொள்வர். சிரமங்களுடன் செய்யும் முயற்சியால் விவாகாதி சித்திகளும் பெறுவர். உத்தியோகப் பெண்களுக்கு மேலதிகாரிகள் உதவிகள் உண்டு.

அதிஷ்ட நாட்கள்: டிசெ. 16,20,21,25,26,30,31
ஜன. 7,8,12,13.
துரதிஷ்ட நாட்கள்: டிசெ. 17,18,19.
ஜன. 1,2,5,6.




சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1 2, 3

துலாம் இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 3ல் தாம்ரமூர்த்தியாக வலம் வருவதால் நன்மை தீமைகள் கலந்து நிகழும். சூரியன் மூர்த்திபலம் குறைந்தாலும் குருபகவான் சனிபகவான் இருவரும் எல்லாப் பலங்களும் பெறுவதால் நற்பலன்களே பெரும்பாலும் நிகழும். பொதுவாக இவர்களின் உடல்நலம் குடும்ப நலம் என்பன சீராக இருக்கும். நண்பர்கள் உறவினர்கள் புத்திரர் முதலியவர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். சிலர் அந்நியருதவி அந்நியதேசப் பொருள்வரவு முதலியனவும் பெறுவர்.

குடும்பத்தில் நல்லுறவும் மனநிறைவும் பெரும்பாலும் ஏற்படும். புத்திரருதவிகள் கிடைப்பதுடன் விவாகாதி சிறப்புக்கும் உரியகாலம். இனசனபந்துக்களின் உதவிஒத்தாசைகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு இம்மாதம் வியாபாரம் படிப்படியாக முன்னேற்றமடையத் தொடங்கும். உணவு, உடைவகை, அலங்காரப்பொருள் வியாபாரிகளுக்கு நல்லலாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் மூர்த்தி பலம் குன்றுவதால் மேலதிகாரிகளுடன் கருத்துமோதல்கள்கூட ஏற்படலாம். ஆனுல் பெரும் பிரச்சனைகள் ஏற்படமாட்டாது. உடன் ஊழியர்களின் உதவி ஒத்தாசைகளும் பெறுவர்.

விவசாயிகளுக்கு சனிபகவானின் சஞ்சார பலம் சாதகமாக அமைகிறது. பயிருற்பத்திச் செழிப்பும் விளைச்சலும் இவர்களுக்கு மனநிறைவைத் தரும். நல்ல சந்தைவாய்ப்பும் கிட்டும்.

தொழிலாளருக்குப் புதியபுதிய வேலைவசதிகள் கிட்டும். ஆனுல் இவர்களின் வருமானமும் அதிகரிக்கும். சுரங்கம், எண்ணெய், இயந்திர ஆலைகள் வாகனச் சாரதியர் முதலியவற்றுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளர் அதிகவருமானம் பெறுவர்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். மாணவர் மனதில் ஊக்கமும் ஆர்வமும் கூடுதலால் சுயமுயற்சியுடன் கல்வியைத் தொடருவர். பரீட்சைகளிலும் சிறப்புச் சித்தி புலமைப் பரிசில்கள் கூடப் பெறுவர்.

பெண்கள் எதிர்பார்ப்புக்களை எளிதாக அடைந்து அனுபவிக்கச் சாதகமானகாலம். விவாகாதி முயற்சிகளும் பெரும்பாலும் கைகூடிவரும். உத்தியோகப் பெண்கள் மேலதிகாரிகளால் அவமதிப்புக்குள்ளாகவும் நேரலாம்.

அதிஷ்ட நாட்கள்: டிசெம. 18,19,22,23,24,28
ஜன. 1,2,10.
துரதிஷ்ட நாட்கள்: டிசெம். 19 இரவு,20,21.
ஜன. 3,4,5.




விசாகம் 4, அனுஷம், கேட்டை

இவ்விராசிக்காரருக்கு இம்மாதம் சூரியபகவான் 2ல் ரஜஸமூர்த்தியாக வலம்வருவதால் சம

பலன்களே பெரும்பாலும் நிகழும். ஜென்மத்தில் செவ்வாயும் ஏழரைச்சனியும் அட்டமத்தில் குருவுமாகச் சம்பந்தப்படுவதால் சுபபலன்களை அதிகம் எதிர்பார்க்கவும் முடியாது. இவர்களினுடல் நலம் அடிக்கடி குன்றும். எதிலும் ஏமாற்றம். அலைச்சல் - வீண் பிரயாசம் - பகை விரோதங்கள் - பொருள் நட்டம் - மனத்தடுமாற்றம் என்பன நிகழும். ஆனால் சூரியன் மூர்த்திபலம் பெறுவதால் இராசாங்க உதவி - பிதிர்வழி உதவி - அற்ப சுகம் - அற்ப வருமானம் - அலைச்சல் மூலம் காரிய சித்தியும் ஏற்படும். நவக்கிரகசாந்தி, தெய்வபக்தியால் சாந்தியடைய முடியும்.

குடும்பத்தில் பிரச்சினைகளும் பொறுப்புக்களும் அதிகரிக்கும். குடும்பச் செலவுகள் கூடுவதால் கடன் தொல்லைகளும் ஏற்படும். இனசன பந்துக்களின் பிணி பீடைகள் முதலான துன்பங்களும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரி புதன் இம்மாதம் பலம் குன்றுவதால் வியாபாரமந்தநிலை நீடிக்கும். நிதிவசதிகளிலும் குறைவு ஏற்படும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்திபலம் பெறுவதால் மேலதிகாரிகளின் ஆதரவு கிட்டும். உடன் உத்தியோகத்தர்களுடன் கருத்து வேறுபாடுகளும் ஏற்படக்கூடும்.

விவசாயிகளுக்கு இயற்கை - செயற்கை ஏதுக்களால் பயிர்ச்சேதம் தொடரும். கூலியாட்களின் ஒத்துழைப்புப் பெறுவதும் கடினம். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் ஏற்படும்.

தொழிலாளர் வேலையில்லாமல் நாளாந்த சீவனத்துக்கே திண்டாட வேண்டியும் நேரும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் ஏற்படும் கடன்பழு ஏறுவதுடன் வாழ்க்கைத்தரமும் குன்றும்.

மாணவர் கல்விக்குழப்பநிலை தொடரும்: விரக்தி - ஏமாற்றம் முதலானவற்றால் சிலர் கல்வியை இடையில் நிறுத்தினாலும் ஆச்சரியமில்லை. பரீட்சை முடிவுகளும் சாதகமாக அமைவதும் கடினமே!

பெண்களின் பொறுமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் சோதனையான காலம். விவாகாதி பிரச்சினை மனதுக்கு வேதனைகளையும் தரும். குடும்பத்தில் ஏற்படும் திடீர் திருப்பங்கள் குடும்பப் பெண்களுக்கு அமைதிதராது.

அதிஷ்ட நாட்கள்: டிசெம். 16,20,21,25,26,30,31
ஜன. 3,4,12,13.

துரதிஷ்ட நாட்கள்: டிசெம். 22,23,24.
ஜன. 5,6,9,10.



# தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியன் ஜென்மத்தில் லோகமூர்த்தியாக வலம் வருவதால் நற்பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. குருபகவானின் சுபகோசார சஞ்சாரத்துடன திருஷ்டியும் இந்த இராசிக்கு இருப்பது நன்மையாகும். பொதுவாக இவர்களின் தேக நலம் குடும்பநலம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானமும் சுமாராக அதிகரிக்கும். ஆனால் செலவுகளும் கூடும். எந்த முயற்சியிலும் தடைதாமதங்களும் அலைச்சலும் ஏற்பட்டபின்பே கைகூடும். எனினும் குடும்பத்தில் மங்கலசுப நிகழ்ச்சிகளும் இடம்பெறச் சாதகமான காலம். வரவுக்கு மிஞ்சிய செலவுகளால் கடன்பழும் உண்டாகும்.

குடும்பத்தில் நல்லுறவு ஏற்படும். குடும்பச் செலவுகள் அதிகரிப்பால் குடும்ப வருமானம் போதாமல் கடன்படவும் செய்வர். புத்திரர் முதலான உறவினர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் காணும். ஆனால் கடன் நிலுவைகளில் வீண் செலவுகள்கூட ஏற்படும். வங்கி - நிதி இருப்புக்களில் பற்றாக்குறைவும் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து மோதல்கள் அசக்கடி ஏற்படும். பதவி இறக்கம் அல்லது பதவி நீக்கம் கூடச் சிலருக்கு ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. வேலைப்பொறுப்பும் கூடும்.

விவசாயிகளுக்குப் பயிரழிவு இந்த மாதமும் அதிகரிக்கும். விளைச்சலும் குறைவுறும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் ஏற்படும், விவசாய முதலீடுகள் நட்டம் தரும்.

தொழிலாளர் வேலையின்றித் துன்பப்பட நேரும். பொதுவாக இவர்களின் நாளாந்த சீவனத்துக்கே போதிய வருமானம் பெறுவது கடினம். ஒப்பந்த வேலைகளையும் உரியகாலத்தில் செய்ய முடியாமையால் நட்டம் ஏற்படும்:

மாணவர் கல்வியில் தடைக்காரணிகள் வலு வடையும். எனினும் இவர்கள் சுயமுயற்சியால் பரீட்சைகளில் தேறுவர் ஆசிரியர்களின் ஒத்தாசைகள் உதவிகளை நாடுவோர் முன்னேற முடியும்.

பெண்களுக்கு எந்தக்காரியத்திலும் பலமுனைத் தாக்கங்கள் உண்டாகும் நல்லகுண நடையுள்ள பெரியவர்களின் உதவி ஒத்தாசைகளைப் பெறுவர் காரியசித்தியடைய முடியும்.

அதிஷ்டநாட்கள் டிசெ. 18,19பக,22பக,23,24
ஜன. 1,2,5பக,6

துரதிஷ்டநாட்கள்:- டிசெ. 16,25,26,27காலை
ஜன. 7பி.ப,8,9மு.ப,12




உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம்

மகரராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியன் 12ல் தாம்ரமூர்த்தியாக வலம்வருகின்றது. மற்ற பிரதான கிரகங்களான வியாழன்- சனி- ராகு - கேதுக்களின் கோசார சஞ்சாரமும் பலமிழந்தே காணப்படுகின்றது. வருமானத்திற்கு மிஞ்சிய செலவு, நண்பர்கள் உறவினர்கள் புத்திரர்கள் போன்றோரின் உதவிகள் கிடையாமை என்பன ஏற்படும், செவ்வாய் சுக்கிரன் இவர்களின் கோசார சஞ்சார பலத்தால் பூமி, வீடு, வாகன வசதிகள் கஸத்திரவழி உதவிகள் விற்றல் வாங்கலால் வருமானங்கள் என்பன கிடைக்கும்.

குடும்பத்தில் பிணி பீடைகள் ஏற்பட்டாலும் கூட கணவன் மனைவி நல்லுறவு வளரும். புத்திரர் உறவினர் உதவி ஒத்தாசைகள் கிடையாது. குடும்ப வருமானமும் அதிகரிக்காது.

வர்த்தகர்களுக்கு இந்தமாதத்தில் வியாபார மந்தநிலை தென்படுகிறது. வாடிக்கையாளர் வரவு வீழ்ச்சியுறுமாதலால் கூடியவரை முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கெடுபிடிகளைச் சமாளிக்கவேண்டி வருமாதலால் சிலர் தாமாகவே பதவி விலகினுலும் கூட ஆச்சரியமிருக்காது. பதவிநீக்க -பதவியிறக்கங்களும் வரலாம்.

விவசாயிகளுக்கு இந்தமாதத்தில் பயிரழிவு ஏற்படுமெனதே வௌ விவசாயப் பண்ணைகளில் கூட நட்டமேற்படலாம். கடன்பட்டு விவசாய முயற்சிகள் செய்வோர் பெரிதுந்தாக்கமுறுவர்.

தொழிலாளர் வேலைகிடையாமல் அவதியுறுவர். தொழிற் குழப்பங்கள் வேலையிழப்புக்களைக் கூட ஏற்படுத்திவிடும். நிதானந் தேவை.

மாணவர் மத்தியில் ஏமாற்றமடைதல், ஊக்கமின்மை, சோர்வு, முதலியவற்றுல் கல்வியில் முன்னேற்றமிராது. சிலர் கல்வியைத் தொடராமல் இடைநிறுத்தினும் ஆச்சரியமில்லை.

பெண்களுக்கு இந்த மாதத்தில் பலப்பல தாக்கங்கள் ஏற்படுவதுடன் விவாகாதி முயற்சிகளில் ஏமாற்றப்படக்கூட சந்தர்ப்பமுண்டு. உத்தியோகப் பெண்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும்.

அதிஷ்ட நாட்கள்: டிச. 20,21,22கா.,25,26,30
ஜன 3கா.,4 5கா.,8,9.

துரதிஷ்ட நாட்கள்: டிச.18,19பக 27பக.28,29பக
ஜன.9பி.ப.10,11மு.ப.




அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3 கால்

கும்பராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 11ல் சுவர்ணமூர்த்தியாக வலம் வருவதும் வியாழன் சனி இவர்களின் சுபசஞ்சாரமும் திருஷ்டியும் பெறுவதும் சிறப்பாகும். இவர்களுக்கு தேகசுகம் குடும்பசுகம் சிறப்பாக இருக்கும். கடந்த காலங்களிலும் பார்க்கப் பொருள் வருமானமும் அதிகரிக்கும். வீடு, வாகனம், இனசன பந்துக்கள் சிறப்பும் சுபமங்கல நிகழ்ச்சிகளும் இடம் பெறும். சிலருக்கு தூர தேசப் பொருள் வரவு. அன்னியர் உதவி மேற்கு தென்மேற்குத் திக்கில் அனுகூலம், விற்றல் வாங்கல் மூலம் லாபங்கள் கிடைக்கும்.

குடும்பத்தில் பொதுவாக அமைதியும் சீரும் சிறப்பும் அதனுல் மன நிறைவும் உண்டாகும். குடும்ப வருமானத்திலும் முன்னேற்றம் பெறுவர். புத்திரர் உறவினர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவது வியாபாரச் சிறப்பைத் தரும். நிதி இருப்புக்களி

லும் முன்னேற்றம் ஏற்படும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்கள் அதிக லாபமும் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்ச்சி முதலான முன்னேற்றங்கள் வரத்தொடங்கும். சிலர் எதிர் பாராமல் திடீரெனச் சிறப்புப் பதவிகளுக்குக்கூட நியமனம் பெறவும் கூடும்.

விவசாயிகளுக்குப் பயிர் விளைச்சல் அதிகரிக்கும். கூலியாட்கள் முதலான எல்லா உதவி ஒத்தாசைகளும் கிடைப்பதால் இவர்களின் வருமானமும் அதிகரிக்கும். விவசாயப் பண்ணைகளிலும் கூடுதல் லாபம் கிட்டும்.


தொழிலாளருக்குச் சாதாரணமாக வேலை வசதிகள் அதிகரிக்கும் தொழிற் பிணக்குகள் கூடப் பெரும்பாலும் நீங்கி விடும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் கூடிய லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்வி முன்னேற்றமும், சுயவூக்கமும் ஆசிரியர் மாணவர் மத்தியில் கருத்து ஒற்றுமை வலுவடையும் சிலர் சிறப்புச்சித்திகள் புலமைப்பரிசில்கள் கூடப்பெறுவர்.

பெண்களுக்கு முயற்சிகள் கைகூடி மகிழ்ச்சி தரும். குடும்பங்களில் நிகழும் மங்கள நிகழ்ச்சிகளும் பொருள் வருமானங்களும் குடும்பப்பெண்களை மகிழச்செய்யும்.

அதிஷ்டநாட்கள்:- டிசெ. 22,23,24,27பக28
ஜன. 1,2,5பக,6,10.

துரதிஷ்டநாட்கள்:- டிசெ.16,19இரவு,21,30,31
ஜன; 11பி.ப12,13பக



# மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி மீன இராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 10ல் ரஜஸ மூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். பொதுவாக இவர்களுக்குக் கடந்த காலங்களிலும் பார்க்க இந்த மாதம் சுப பலன்கள் அதிகரிக்கும். இவர்களின் தேகசுகம் குடும்பசுகம் சீராக இருக்கும். பொருள் வருமானமும் கணிசமாக அதிகரிக்கும். இராசாங்க அதிகாரிகளின் உதவி ஒத்தாசைகளும், பிதிர்வழிச் சிறப்புக்களும், தொழிற்சித்தியும் பெறுவர். சில சமயங்களில் வீட்டில் அல்லது குடும்பத்தில் மங்கல காரியங்கள் கூட நிகழலாம். தசாபுத்தி அந்தர பெலமுள்ளவர்க்குச் சுபபலன்களே தொடர்ந்து நிகழும்.

குடும்பத்தில் பெரும்பாலும் மன நிறைவான சம்பவங்கள் நிகழும். குடும்பவருமானமும் கூடும். ஆனால் புத்திர உறவினர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைப்பது கேள்விக்குறியாகவே இருக்கும். சிலருக்கு வீடுவசதிகள்கூடக் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு கடந்த காலங்களிலும் பார்க்க இந்த மாதம் வியாபாரம் விறு விறுப்பாக முன்னேற்றம் பெறும். பழைய முதலீடுகளிலும் வருமானம் வரத்தொடங்கும். ஆனால் கடன் நிலுவைகளால் பிரச்சினைகள் கூட ஏற்படலாம். உணவுவகை, தானியவகை, அழகுசாதனப் பொருட்கள் வியாபாரஞ்செய்வோர் கூடிய வருமானம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவிச் சிறப்புகள் கிடைக்க சாதகமான காலம். மேலதிகாரிகளின் நல்லெண்ணமும் பாராட்டுக்களையும் பெறுவர். உடன் உத்தியோகத்தர்களின் உதவிகளும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு சனி பகவான் பலம் குறைவதால் உற்பத்திச் செலவு அதிகரிப்பும் பயிரழிவும் இந்த மாதம் தொடரும். கிடைக்கும் வருமானத்திலும் செலவுகள் கூடுவதால் லாபம் பெறுவது கடினம்.

தொழிலாளருக்கு வேலை வசதி குறைவதால் வருமானமும் வீழ்ச்சியுறும் கிடைக்கும் வேலைகளுக்கும் உரிய ஊதியம் கிடையாது. தொழில் பிணக்குகளும் வலுவடையும். தொழில் ஒப்பந்தங்களிலும் லாபம் கிடையாது.

மாணவர் கல்வித்தடைக்காரணிகளின் செயற்பாடுகளில் தளர்வுகள் காணப்படும். ஆசிரியர்களின் ஒத்தாசைகளும் அவ்வப்போது கிடைப்பதால் இவர்களின் முயற்சிக்கு ஊக்கமுண்டாகும். சுயமுயற்சியால் கல்வியல் தேர்ச்சபெறுவர்.

பெண்களுக்கு சிலதடைகள் ஏற்பட்டாலும் பொதுவாக காரிய சித்தியும் பெறுவர். கன்னிப் பெண்களுக்கு விவாகாதி முயற்சியிலும் சிலசமயம் சித்தியும் பெறுவர்.

அதிஷ்டநாட்கள்:- டிசெ, 16,25,26,27கா'30,31
ஜன. 3,4,5கா.8,12,13பக

துரதிஷ்டநாட்கள்:- டிசெ. 18,19,22பக.23,24
ஜன,1,2,3அ.கா

# சோதிடத்தில் மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும்.

ஐ. வைத்தியநாதர் B. Sc (London) Dip in-Ed (Ceylon) முள்ளானை – இளவாலை.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சோதிடரீதியாக உள்ள விரதவியாபகங்களை வழிமுறைகளாகக் கொண்ட இந்துசமயத்தை எடுத்துக் கொள்வோம். இந்துசமயத்தில் விஞ்ஞான அறிவின் உபயோகம் பல உண்டு. ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்வோம். எந்த ஒரு இந்து ஆலயத்திலும் கற்பூரம் எரிக்கப்படுவதையும், கற்பூரப் பஞ்சலாத்திக்குப் பூசையில் முக்கியத்துவம் கொடுப்பதையும் அறியாத இந்துக்கள் இலர். கற்பூரம் முன்பு தாவரங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது. கற்பூரவள்ளியின் மணம் கற்பூரத்தின் மணத்தை ஒத்தது. கற்பூரம் ஓர் ஐதரோ அரோமற்றிக்கு (Hydro Aromatic) வகையைச் சேர்ந்த பதார்த்தம். இதனை எரிக்கும் பொழுது இதிலிருந்து வெளியேறும் சுடர் கரி நிறத்தைக் கொண்டிருக்கும். அரோமற்றிக்குச் சேர்வைகள் எரியும் பொழுது அடர்ந்த புகையுள்ள சுவாலைகளைக் கொண்டுள்ளன. இப்புகையில், கரி சேர்வையிலிருந்து உடன் தோன்றுவதால் ஏவப்படுத்தப்பட்ட அல்லது தாக்கும் தன்மை கூடிய நிலையிற் காணப்படும். கரிக்கு நச்சுத் தன்மையை உறிஞ்சும் தன்மை உண்டு. பலர் கூடுகின்ற இந்து ஆலயங்களில் எப்பொழுதும் பலவகையான நோய்க்கிருமிகள், பக்றீரியாக்கள் தோன்ற இடமுண்டு. இவற்றை உறிஞ்சும் தன்மை கரிக்கு உண்டு. ஆகவே மக்கள் கூடுதலாகக் கூடும் இடங்களில் கற்பூரம் எரிக்கப்படுவது அவசியமாகின்றது.

இதனாலேயே நம் முன்னோர் நீண்ட பயணங்களில் செல்லும் பொழுதும் உணவுப் பொதிகளில் கரித்துண்டை எடுத்துச் செல்வார்கள். இன்றும் இவ்வழக்கம் உண்டு. நச்சுத்திரவம் அருந்தியவருக்கும் மேற்கத்திய வைத்தியத்தின்படி கூடுதலாகக் கரியை உண்ணும்படி ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இது ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களில் ஏவப்பட்ட கரி மாத்திரைகள் (Activated Charcoal pills) என விற்பனையாகின்றது. கரியை உண்ண இயலாத நிலையில் உள்ளவருக்கு கரியைப் பொடியாக்கி அல்லது ஏவப்பட்ட கரிக்குளிகைகளைப் பொடியாக்கி நீருடன் கலந்து பருக்குதல் வேண்டும். மேலே கூறப்பட்ட விஞ்ஞான உதாரணத்திலிருந்தும் நாம் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரலாம். அஃதாவது இந்துசமயம் தோன்றும் பொழுதே அதனுடன் விஞ்ஞானமும் விஞ்ஞானத்தின் ஒரு அங்கமான சோதிடமும் தோன்றின என்ற முடிவாகும். இவற்றிற்குச் சான்றாக மேலும் பல உதாரணங்கள் உண்டு.

சோதிடத்திலும் விஞ்ஞானத்திலும் உள்ள அடிப்படைத் தத்துவங்களையும் தொடர்புகளையும் ஆராய்வோமாக. எந்தவகை அறிவாயினும் அது விஞ்ஞானத்தின் ஓர் அங்கமாக எடுத்துக் கொள்ளப்படவேண்டின் அவ் அறிவை வளர்க்க விஞ்ஞான அணுகு முறையையே பயன்படுத்துகின்றோம். விஞ்ஞானிகளும் விஞ்ஞான அணுகுமுறையிலேயே விஞ்ஞானத்தை வளர்த்தனர். இத்தகைய விஞ்ஞான அணுகுமுறை சோதிடத்திலும் தொன்றுதொட்டு இருந்து வந்தது. ஏனெனில் ஓர் உதாரணமாக ராகு, கேதுவின் தன்மைகளும், இவர்களினால் மக்களுக்கு ஏற்படக்கூடிய நன்மை தீமைகளும் சோதிடம் ஆரம்பித்த காலங்களில் இல்லை என நூல்கள் கூறுகின்றன. மேலும், இவை இராமாயணம் வந்த காலத்தின் பின்பு சோதிடத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. சிங்களச் சோதிடர்களும், பர்மிய நாட்டுச் சோதிடர்களும் இக்கிரகங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை, எனினும் சமீபத்தில் ராகு கேதுகளுக்கு சிங்களச் சோதிடர்கள் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆந்திராவிலும் பல காலங்களின் பின்பு சோதிடர்கள் இவற்றைக் குறிப்பிடத் தொடங்கினர். இன்று யூரேனஸ், நெப்டியூன் போன்றவற்றையும் நாம் சோதிடத்திற் சேர்த்துப் பலன்களைச் சொல்கின்றோம். இந்நிலை எவ்வாறு உருவானது? இதுவே சோதிடம் விஞ்ஞானத்தின் ஓர் அங்கமென்பதை வலியுறுத்துகின்றது. விஞ்ஞான அணுகுமுறையின்படி முதற்படி தகவல்களைக் கொண்டு விஞ்ஞானிகளால் கருதுகோள்கள் கூறப்படுகின்றன. சில

# சக்தி விரதங்கள்

'கோப்பாய் – சிவம்'

## வரலக்ஷ்மி விரதம்

பவிஷ்யோத்தர புராணத்திலே சிறப்பித்துக் கூறப்படும் இந்த வரலக்ஷ்மி விரதம் ஆவணிமாத பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமையிலே அநுஷ்டிக்கப்பட வேண்டியது.

ஒருசமயம் உமாதேவியார் சிவபெருமானை நோக்கி, ''ஐயனே, பூவுலகில் சகலசெல்வபோகங்களையும் சௌபாக்கியங்களையும், புத்திரசம்பத்தையும் வழங்கக்கூடிய விரதம் எது?'' என்று வினவியபோது அவர் உமாதேவியாருக்கு இந்த விரதமகிமையைக் கூறினர்.

முன்பு குண்டினம் என்ற நாட்டிலே சாருமதி என்ற சுமங்கலிப்பெண் இருந்தாள். அவள் நல்ல தெய்வபக்தியும் தூய்மையும் ஆசார அநுஷ்டானமும் உடையவளாக இருந்தாள். ஒருநாள் அவள் கனவிலே வரலக்ஷ்மிதேவி தோன்றி இந்த விரதத்தை உபதேசித்து மறைந்தாள். அவளும் உடனே சகல பெண்களையும் அழைத்து இப்புதுமையைக் கூறினள்.

குறித்த விரதநாளிலே சகல பெண்களுமாக நகர் முழுவதும் அலங்கரித்து முறைப்படி விரதமநுஷ்டித்து வரலாயினர். என்றுமில்லாதவாறு அங்கு சகல செல்வமும் பொலிந்து விளங்கிற்று.

நன்கு தூய்மையாக்கி மாவிலை தோரணங்களாலே அலங்கரித்த மண்டப நடுவே மேடை ஒன்றில் நெல், அரிசி முதலியவற்றை முறைப்படி பரப்பித் தாமரைக்கோலத்தை அதன்மேல் இட்டுக் கும்பத்தை அதன் மீது வைக்கவேண்டும். ஏனைய பூஜைகளுக்கு நீர்நிரப்பிய கும்பம் வைப்பது வழக்கம். ஆனால் வரலக்ஷ்மி விரதபூஜைக்கு பச்சரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைக்க வேண்டும்.

நல்ல கழிநூலிலே மஞ்சள் தோய்த்து ஒன்பது இழைகள் கொண்டதாக முறுக்கி எடுத்து ஒன்பது முடிச்சுக்களை முடிந்து இந்தக் காப்பினைக் கும்பத்தில் வைத்துப் பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

வழக்கம்போல சங்கல்பபூர்வமாக புண்யாகவாசனம் முதலிய பூர்வாங்க பூஜைகளுடன் விசேஷ உபசார பூஜை அங்கபூஜை முதலியன செய்து ஒன்பது நாமங்களால் நூலிலுள்ள ஒன்பது முடிச்சுக்களையும் பூஜித்து அதனை வலதுகையில் கட்டிக்கொள்ளவேண்டும். பொதுவாக விரதங்களுக்குக் காப்புக்கட்டும்போது ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் கட்டுவது வழக்கம். ஆனால் வரலக்ஷ்மி பூஜைக்கு மட்டும் -இது பெண்களுக்குரிய விரதம் -வலது கையிலேயே காப்புக்கட்டிக்கொள்ள வேண்டும், ஸ்லோகத்திலேயே இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. காப்பினைக்கையிலேகட்டும்போது சொல்லும் ஸ்லோகம்:

ஸர்வ மங்கல மாங்கல்யே ஸர்வபாப ப்ரணாஸினீ
தோரகம் ப்ரதி க்ருஹ்ணாமி ஸுப்ரீதா பவஸர்வதா
பத்குமி தக்ஷிணே ஹஸ்தே நவசூத்ரம் சுபப்ரதம்
புத்ர பௌத்ராபி வ்ருத்திம்ச ஸௌபாக்யம்
[தேஹிமேரமே |

ஒன்பது முடிச்சுக்களுக்கும் உரிய நாமங்கள் வருமாறு:- கமலா, ரமா, லோகமாதா, விஸ்வஜனனீ, மஹாலக்ஷ்மீ, க்ஷீராப்திதநய, விஸ்வஸாக்ஷிணீ, சந்த்ரஸோதரீ, ஹரிவல்லபா. இவை ஒவ்வொன்றுக்கும் முன்னால் ஓங்காரமும் பின்னால் நம: என்றும் சேர்த்துப் பூஜை செய்க.

விசேஷ நைவேத்தியமாக் நெய்யுடன் கூடிய ஹவிஸ் (நெய்ச்சாதம்) சொல்லப்பட்டிருக்கிறது. வரலக்ஷ்மீ பூஜைக்குரிய விசேஷ அர்ச்சனைப் பொருள் அறுகு.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதாவர்கள் 'வரலக்ஷ்மீ நமஸ்துப்யம்' என்ற தமது கீர்த்தனையில் ''ஸ்ராவண பௌர்ணமி பூர்வஸ்த சுக்ரவாரே சாருமதீ ப்ரப்ருதி பூஜிதாகாரே'' என்று இந்த விரதவரலாற்றைப் பாடுகிறார்.

உபவாசம் போன்று கடுமையான விதிமுறைகள் இந்த விரதத்துக்கில்லை. மத்தியானம் ஒருநேரம் போசனம் செய்யலாம். இரவு பலகாரபட்சணங்கள் ஏதாவது உட்கொள்ளலாம். ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அநுஷ்டித்த பின் விரதோத்யாபனம் செய்யலாம்.

# காரடை நோன்பு

## காரடையா நோன்பு / காமாட்சி நோன்பு

பார்வதிதேவி ஒருசமயம் காஞ்சியில் ஏகாம் பரநாதரைப் பூஜை செய்து சிவசக்தியிடையே பிரிவுநேராதிருக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தாள். அந்தத் தினத்தையே காமாட்சிநோன்பு என்பர்.

சத்தியவான் மனைவி சாவித்திரி காட்டில் இருக்கும்போது தனக்குக் கிடைத்த கார் அரிசி யைக்கொண்டு அடை தட்டிவைத்து அம்பிகை யைப் பிரார்த்தித்துக் கணவனின் உயிரை மீட்ட தினமே காரடை நோன்பு என்கிறார்கள் சிலர். (சாவித்திரி கணவனை மீட்டதினம் ஆவணி மாதத் தில் வரும் பௌர்ணமியில் என்று கூறி அதனைச் சாவித்திரி நோன்பு என அநுஷ்டிப்பதும் உண்டு.)

மாசிமாதம் முடிந்து பங்குனிமாதம் பிறக்கும் நேரத்தில் கொள்ளப்படும் விரதமான காரடையா நோன்பு சுமங்கலிப் பெண்களுக்குரியது. ''மாசிக் கயிறு பாசிபடியும்'' என்பது பழமொழி. சுமங் கலிகள் தமது திருமாங்கல்யக் கயிற்றினை மாற் றிப் புதிய கயிற்றினைக் கட்டிக்கொள்வர்.

இவ்விரதநாளில் பகல் முழுவதும் உபவாச மிருக்க வேண்டும். இரவில் குத்துவிளக்கு ஏற்றி வைத்து வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், அடை, வெண்ணெய் என்பவற்றை நிவேதனம் செய்து பூஜித்து "உருகாத வெண்ணெயும் உப் பிட்ட அடையும் வைத்து நோன்பு நோற்கிறேன். ஒருநாளும் என்கணவர் என்னைப் பிரியாமலிருக்க வரமருள்வாய்தேவி'' என பிரார்த்திக்கவேண்டும்.

புதிய மாங்கல்யக் கயிற்றைப் பூஜையில் வைத்துப் பூஜித்தபின் அதனைக் கழுத்தில் கட்டிப் பழையதை நீக்கவேண்டும்.

இரண்டுவிதமான அடைகள் இங்கு நிவேத னத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. காரடை. உப்படை என்பனவே அவை. கார்அரி எனப்ப டும் தவிட்டுப்பச்சரிசியை நீரில் நனைத்து, தேங் காய், உப்பு, சர்க்கரை என்பன சேர்த்து அரைத்து அடையாகத்தட்டி நீராவியில் வேகவைத்து எடுப் பதே காரடையாகும். சர்க்கரை சேராமல் செய் வது உப்படை. துவரையும் சேர்த்து அரைக்க வேண்டுமெனச் சிலர் கூறுவர்.

இவற்றை ஆலம் இலையில் படைத்துப்பூஜை முடிவில் அடையும் வெண்ணெயும் மட்டும் உண வாக உண்டு மறுநாட்காலை பாரணை செய்ய வேண்டும். ஏனைய நாட்களில் கணவனை முதலில் உணவருந்தச் செய்யும் மனைவி இவ்விரத நாளில் மட்டும் முதலில் தான் உண்ணுவது வழக்கம்.

சோதிடத்தில்...... (17-ம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் ஒருவித தகவல் சேகரித்தல் கருது கோள் கூறல், பல பரிசோதனைகளைச் செய்து கருதுகோளை வாய்ப்புப் பார்த்தல் பின் ஒரு விதி யைக் கூறுதல் போன்ற விஞ்ஞான அணுகு முறைப் படிகளின்றியே எதிர்பாராத முறையில் முடிவுகளும் பெறப்படுகின்றன. உதாரணமாக விஞ்ஞானத்தில் உரோஞ்சல் (Rongen) 'X' கதிர் களைக் கண்டுபிடித்தலும் ஹென்றி பெக்கரலால் கதிர்த்தொழிற்பாட்டைக் கண்டுபிடித்தலையும் கூறலாம், சோதிடமும் இவ்விரு வழிகளால் உண் டானது என்பதற்குச் சோதிடத்தை ஆராய்ச்சி நோக்குடன் கற்பவர்கள் அறிவார்கள். ராகு கேதுக்களின் சேர்க்கையையும், யூரேனஸ், நெப் டியூன் ஆகியவற்றின் சேர்க்கையையும் விஞ்ஞான அணுகுமுறையினால் சோதிடத்தில் இடம்பெற்ற தென நாம் அறிகின்றோம்.

விஞ்ஞானம் என்பது உண்மையானது; ஆனால் சிலர் சோதிடத்தை மூடநம்பிக்கையுள் ளது என்றும், உண்மையற்றது என்றும் எதுவித விஞ்ஞான அடிப்படையுமற்றது என்றும் கூறுகின் றனர். இத்தகைய முடிவுக்கு வருபவர்களுக்கு இவ்வாறு கூறியவர்களுக்கு இந்தியாவின் இளைப் பாறிய தலைமை நீதி அரசர் V.R. கிருஷ்ண ஐயரின் கூற்று விடை பகரும். "To Rail at Such an Experience as Superstition, is a Crass Superstition Wittingly Worn by Self Opinionated Rationalists, Not Discerning Scientists" அஃதாவது இத்தகைய அனுபவத்தை மூட நம் பிக்கை எனக் குறைகூறுபவர்கள் தமது அறிவில் பெருமை கொண்டுள்ள அறிவற்ற மூட நம்பிக்கை யுடைய பகுத்தறிவாளிகளேயொழியத் தெளி வாக உய்த்துணர்ந்த விஞ்ஞானிகளல்ல. என்ப தைப் பகுதிப்படிப்புள்ள பகுதி அறிவுள்ளவர்களை ஒரு சாரராகவும் படிப்பற்ற பாமர மக்களை மற் றய சாரராகவும் வகுக்கலாம்.

விஞ்ஞானமும் சமயமும் ஒன்றுக்கொன்று முரணானவை அன்று. ஆனால் இவை ஒன்றை யொன்று முழுமையாக்கும் கூறுகளாகும். இவை இரண்டும் ஒரே உண்மை, சத்தியம் (Truth) என்ற குறிக்கோளை எல்லையாகவுடையன.

(வளரும்.)

கணித சுத்தமும் நுட்பமும் உடையது

**திருக்கணித பஞ்சாங்கம்**

# ஜாதகத்தில் சனி



வி. எஸ். வேலாயுதன்
துறைநீலாவணை

இங்கு ஒருவரின் ஜாதகத்தில் சனி 6ல் அமையும் பொழுது எத்தகைய பலாபலன்களைத் தரும் என்பதை நோக்குவாம். ஜாதகத்தில் 6-ம் இடத்தைக் கொண்டு அம்மான் நோய், பகைவர், கலகம், ஆயுதவிரணம், பணநஷ்டம், திருடர் பயம், ஜலகண்டம், சர்ப்பகண்டம், சிறைவாசம், கடன்படுதல், நாற்கால் ஜீவலாபம் ஆகியவற்றை அறிவர். இங்கு சனி முதலிய பாபர்கள் அமருமிடத்து முற்கூறியவற்று எதிரிடையான நற்பலன்களே நிகழும். பொதுவாக சத்துருஜயம், நோய்நீக்கம், பணவரவு, அதிகாரம், மகிழ்ச்சி, பிரசித்தம், ஆகிய பலன்கள் நடைபெறும். ஆனால் இலக்கினவாரியாக நோக்குமிடத்து இருப்பு, ஆதிபத்திய உறவுகளால் பலன்கள் வேறுபடும். எனவே மேடம் முதலிய பன்னிரு இலக்கினவாரியாக 6-ம் இடத்துச்சனி எத்தகைய பலாபலன்களைத் தரும் என்பதைக் காண்பாம்.

## மேடம்

இந்த இலக்கின காரருக்குச் சனி 10-11-ம் இடங்களுக்கு அதிபராகி 6ல் நட்புப் பெறுவார். இதனால் அரசாங்க நன்மை பதவி மேன்மை, பிரபல கீர்த்தி, தெய்வவழிபாடு, மூத்தசகோதர நன்மை, பொருளாதார விருத்தி, காரியசித்தி, சத்துரு வெற்றி, ஏழ்மை, கலகக்குணம், குறுகிய மனப்பான்மை, பொதுசன வாழ்க்கைப்பிரியம், தேகசுகக்குறைவு என்பனவுண்டாம்.

## இடபம்

இவர்களுக்குச் சனி 9-10க்குடையராகி 6ல் உச்சம் பெறுவார். இதனால் பிரபலம், தருமகாரியசித்தி, செல்வப்பேறு, அழகுடைமை, சுதந்திரப்போக்கு தந்தைவழி நன்மை, சத்துருகடாட்சம், தேவதாதரிசனம், அரசாங்க உதவி, தொழில் பதவி மேன்மை, புகழ், செல்வாக்கு என்பன நடைபெறும்.

## மிதுனம்

இந்த இலக்கினகாரருக்குச் சனி 8-9க்குடையராகி விருச்சிகத்தில் பகைப்பெறுவார். இதனால் ஆயுதபயம், நோய், காரியக்கேடு, அவப்பெயர், களத்திர விரோதம், பிதாவழித்துயர், தருமகாரிய வெறுப்பு, தெய்வநிந்தனை மறைமுக உறுப்புக்களில் நோய், வன்மனம், மகிழ்ச்சிக் குறைவு விஷத்தால் ஆபத்து, அக்கினி- ஆயுத பீடை, பணவிரயம் என்பனவுண்டாம்.

## கடகம்

இங்கு சனி 7-9க்குடையராகி 6ல் தனுவில் நட்புப் பெறுவார். இதனால் விவாகத்தடை, களத்திரபிணி, வழக்குக் கஷ்டம் நோய்நீக்கம், ஆயுள்விருத்தி, காரியசித்தி, துணிவு, சத்துரு வெற்றி பிரயாணக்கஷ்டம் என்பனவுண்டாம்.

## சிங்கம்

இவர்களுக்குச் சனி 6-7க்குடையராகி 6ல் ஆட்சிப்பெறுவார். இதனால் நோய் நீக்கம், சமாதான வாழ்வு, இனசன ஆதரவு, முன்கோபம், கவலை, தொழில்விருத்தி, காலாந்தர விவாகம், களத்திர மூலமான செலவு, பிரயாண அலைச்சல் என்பனவுண்டாம்.

## கன்னி

இவர்களுக்குச் சனி 5-6க்குடையவராகி 6ல் ஆட்சி மூலத்திரிகோணம் பெறுவார். இதனால் உயரிய அந்தஸ்து, மதிநுட்பம், தற்பெருமை, மகிழ்ச்சி, தத்துவவிசாரம், சத்துருவெற்றி, புத்திரபாக்கிய விருத்தி. பிதாவழி நன்மை, புராணேதிகாச பிரபந்தவுணர்ச்சி, மந்திரசித்தி, வித்தியாலாபம், நீதி சாஸ்திரவுணர்ச்சி என்பனவுண்டாம்.

## துலாம்

இந்த இலக்கினகாரருக்குச் சனி 4-5க்குடையராகி 6ல் நட்புப் பெறுவார். இதனால் கல்விப்பேறு, வாகன நன்மை, வியாபாரவிருத்தி, வீடு வாசல்பேறு, தாய்சுகம், பூமியால் லாபம், இனசன ஒற்றுமை, ஆலயசேவை, பிள்ளைகளால் நற்பெயர். பிதாவழி உதவி, சமயசாஸ்திர உணர்ச்சி, எழுத்துத்துறையில் ஈடுபாடு, பூர்வ புண்ணிய நன்மை, நற்பண்பு, கொடை, மகிழ்ச்சி, செல்வப்பேறு பிறர் உதவி என்பனவுண்டாம்.

## விருச்சிகம்

இவர்களுக்குச் சனி 3-4க்குடையராகி மேடத்தில் நீசமடைவார். இதனால மந்தபுத்தி, முன்கோபம், கொடூரசித்தம், ஒழுக்கக் குறைவு, கலகக்குணம், தப்பபிப்பிராயம், கல்வி, உயர்கல்வித் தடை, பூமி, வாகனவகை நட்டம், தாய்க்கு

(24 -ம் பக்கம் பார்க்க)

# இந்து சமய விரதங்களும் வியாபகங்களும்

"வேதாகம சோதிட பூஷணம்"

தொடர் 3

## சதுர்த்தி விரதம்

சதுர்த்தி விரதமானது ஒவ்வொரு மாதத்திலும் சுக்ல பக்ஷ சதுர்த்தித்திதியன்று கொள்ளப்படும்; சதுர்த்தித்திதி மத்தியான்ன வியாபகமாக இருக்கும் போது கொள்ளப்படுவதாகும். இவ் விரதம் விநாயகரைக் குறித்து நோற்கப்படுகின்ற ஒரு விரதமாகும். இத்தினத்தில் விநாயகருக்கு விசேட அபிஷேக ஆராதனைகள், பூஜைகள் செய்து வழிபடுவதால் நற்பலன் உண்டாம். ஆவணி மாதத்தில் வரும் சுக்ல சதுர்த்தி விநாயக சதுர்த்தி என்று சிறப்பித்துச் சொல்லப்படும்.

## ஷஷ்டி விரதம்

இவ்விரதம் உபவாசத்தைச் சேர்ந்தது; மாதந்தோறும் சுக்லபக்ஷத்து ஷஷ்டித்திதி அஸ்தமன வியாபகமாக இருக்கும் பொழுது இவ்விரதம் கொள்ளப்படல் வேண்டும். இதற்கு பூர்வ வித்தை பிரதானமாகும். அதாவது 12 நாழிகைக்கு குறையாத பஞ்சமியின் சம்பந்தம் இருக்க வேண்டும் என்பதாகும். ஷஷ்டி ஸப்தமியோடு பகலில் கூடியிருந்தால் அதைவிடுத்து பஞ்சமியோடு கூடியிருக்குந் தினத்தையே கொள்ள வேண்டும். ஐப்பசி மாதத்தில் வரும் ஷஷ்டி ஸ்கந்தஷஷ்டி என்று சிறப்பித்துச் சொல்லப்படும். இத்தினம் ஷண்முகப்பெருமானுக்கு மிக விசேஷமுடையதாகும். இத்தினத்தை இறுதியாகக் கொண்டே முன் ஆறு தினங்களிலும் முருகப் பெருமானுக்கு உற்சவங்கள், பூஜைகள், விசேட அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்படுகின்றன. கார்த்திகை - சுக்ல - பிரதமையில் ஸ்கந்தஷஷ்டி விரத ஆரம்பம் கொள்ளப்படும். மார்கழி மாதத்தில் வரும் சுக்ல ஷஷ்டி விஞயகஷஷ்டி என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்றது. இவ் ஷஷ்டி தினத்தோடு சதய நக்ஷத்திரமும் சேருமாயின் அத்தினம் மிக விசேஷமானதாகும். சதயம் சேரா விடினும் ஷஷ்டித்திதியையே கவனித்து இவ்விரதம் கொள்ளப்படல் வேண்டும் இத்தினம் விஞயகப் பெருமானுக்கு விசேடமுடையதாக கொள்ளப்படுகின்றது.

## ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி

ஆவணி மாதத்தில் கிருஷ்ணுஷ்டமியும், ரோகிணியும் கூடிய தினத்தன்று இடப லக்கினத்தில் (நடுநிசியில்) ஸ்ரீ கிருஷ்ண பகவான் தேவகியினிடம் ஜனனமானுர். ஸப்தமியோடு கூடிய அட்டமியும், கார்த்திகையோடு கூடிய ரோகிணியும் வித்தை என்று சொல்லப்படும். இத்தினத்தில் உபவாசம் முதலியன செய்யக்கூடாது. சூரியோதயத்தில் ரோகிணி கார்த்திகையோடு கூடியிருக்குமாஞல் அது காலையிலுள்ள வேதை ஆகையால் விரதத்திற்கு ஆகாது. சூரியோதய காலத்தில் அட்டமி ஸப்தமியோடு கூடியிருக்குமாஞல் அது கூடாதென்றும் நவமியோடு கூடியிருந்தால் அதில் விரதம் செய்ய வேண்டும் என்றும் சொல்லப்படுகின்றது. ஆகவே அஷ்டமியிலோ நவமியிலோ தசமியிலோ வேதையில்லாத ரோகிணி கிடைக்குமாஞல் அதுவே ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி விரத தினமாகக் கொள்ளப்படல் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. நவமியோடு கூடிய அஷ்டமியும் மிருகசீரிடத்தோடு கூடிய ரோகிணியும் சுத்தை என்று சொல்லப்படும்; இச் சுத்தைத் தினத்திலேயே ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி கொள்ளப்படுதல் வேண்டும்; கிருஷ்ணுஷ்டமியும் ரோகிணியும் சந்திரோதய நேரத்தில் அதாவது நடுநிசியில் சேர்ந்து வரும் தினம் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்திதினமாகும். தெய்வ காரியத்தில் சங்கிராந்தி வேதையுள்ள திதியை கிரகிக்கக் கூடாது. ஆஞல் ஒன்று சங்கிராந்தி வேதையுள்ளதாயும், மற்றையது ஸப்தமி கார்த்திகை வேதையுள்ளதாயும் வந்தால் ஸப்தமி கார்த்திகை வேதையுள்ளதைத் தவிர்த்து சங்கிராந்தி வேதையுள்ளதையே கொள்ள வேண்டுமென்று கூறப்படுகிறது.

(தொடரும்)

---

ஒருவன் எல்லோருக்கும் நல்லவனுய் இருப்பது உயர்வானது. அதனைக் காட்டிலும் மனச்சாட்சிக்கு ஒழுக்க சீலனுய் இருப்பது உயர்விலும் உயர்வானது.

-தர்மசாஸ்திரம்.

---

# சனிதோஷம் நீங்க பிராயச்சித்தம் என்ன?

எஸ். வி. சிவானந்தன்,
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

சந்: சனிதோஷம் நீங்க என்ன வழிவகைகள் கையாளப்பட வேண்டும் என்பதை அறியத் தரவும்.

நிவி; சனீஸ்வரனுக்குப் பிரீதி செய்வதில் பின் வரும் ஐந்து பிராயச்சித்தங்கள் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன:

1. இந்தியாவில் திருநெல்லாற்றிலே சனீஸ்வரனுக்கென அமைந்த கோவிலிலே சென்று வழிபடல் முறையானது.

2. ஒரு இரும்புப்பாத்திரத்திலோ அல்லது கறுத்த மண்பாண்டத்திலோ சுத்தமான எள் எண்ணையை நிரப்பி, சனிதோஷமுள்ளவர் அந்தப்பாத்திரத்தினுள்ளே தெரியும் தன் பிம்பத்தை நோக்கி சிவனை நினைந்து தனக்குள்ள தோஷமெல்லாம் போக்கும் வண்ணம் வேண்டிக் கொள்ளல். பின் இந்த எண்ணையோடு கூடிய பாத்திரத்தை ஒரு சீலமுள்ள பிராமணருக்கு தானமாக்கி அவர் இதனை வாங்கியபடி திரும்பிப்பாராமல் போகச் செய்தல் வேண்டும். இதனை சனி வாரத்தில், சனிஹோரையில் செய்தலே உத்தமம்.

3. ஒரு இரும்புக் கிண்ணம் அல்லது கறுத்த மண்சட்டியை வெளியே உயரத்திற் கட்டி சனி தோஷமுள்ளவர் தான் உண்ணும்போது தன்னுணவில் ஒரு கவளம் அப்பாத்திரத்தில் இட்டு, சனிபகவானின் வாகனமாகிய காகமும் மற்றும் பிராணிகளும் உண்டு களிக்கச் செய்தால் சனீஸ்வரன் பிரீதியடைவார்.

4. பயபக்தியுடன் ஷண்முக கவசத்தின் 30பாடல்களையும் காலை, மாலை சனிதோஷமுள்ளவர்கள் ஓதிவர அவர்கட்கு அத்தோஷம் குறைவுறும்.

5. நவக்கிரக தேவர்கள் உள்ள ஆலயத்தில் சனீஸ்வரனை நீலப்புஷ்பங்களால் அர்ச்சித்து எள்ளெண்ணெய் எரித்து வழிபடல் சனிதோஷம் நீங்க வழியாகும்.

எஸ். இராசலிங்கம், ஹுணுகலை.

சந்: காலசர்ப்பயோகம் என்றால் என்ன? அது எக்கிரகங்களால் ஏற்படுகின்றது.

நிவி: காலசர்ப்பயோகம் ராகு, கேதுக்களாலேயே ஏற்படுகின்றது. ஒரு ஜாதகத்தில் எல்லாக் கிரகங்களும் ராகு, கேதுக்களுக் கிடையில் அகப்பட்டு நிற்பதால் இந்த யோகம் ஏற்படுகின்றது. இந்த யோகமுடையவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேற்றமானது சாணேற முழம் சறுக்கிய வாறு அமையும். நினைப்பதற்கு எதிர்மாறான பலன்களைத் தோற்றுவிக்கும்.

## சந்தேக நிவிர்த்தி 'உத்தரம்'

வ. சின்னையா, நீர்வேலி.

சந்: ரொறன்ரோ (கனடா) வின் தேசாந்தரம் 79 பாகை 22 கலை மேற்கு, வாக்கிய பஞ்சாங்கத்தில் அந்தரமினிற்றை உச்சத்துடன் கூட்டல் என்று இருக்கின்றது. கூட்டலா அல்லது கழித்தலா எது சரி என அறிய விரும்புகின்றேன்.

நிவி: வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு வாக்கிய கணிதரிடம் கேட்டுப் பதிலைப் பெறவும். மேலும், ரொறன்ரோவின் தேசாந்தரம் 79 பாகை 22 கலை. அந்நாட்டின் பொதுநேரம் 75 பாகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசாந்தரரேகை, பொதுநேர தேசாந்தர ரேகைக்கு மேற்காக இருப்பதால் அந்தரமினிற்றை பொதுநேரத்திலிருந்து கழிக்க சுதேசநேரம்வரும், அத்துடன் கனடாவில் ஏப்ரல் மாதத்தில் இருந்து ஆகஸ்ட்வரை கோடைகால நேரமாக (Summer Time) 1 மணித்தியாலம் கூட்டி வழங்கப்படுகின்றது. இக்காலத்தில் அந்நாட்டில் குழந்தை பிறந்தால் 1 மணித்தியாலம் கழித்தே ஜாதகம் கணிக்கவேண்டும்.

குறிப்பு:- சந்தேகங்களை கேட்பவர்கள் போஸ்ட் காட்டில் மட்டும் சொந்த விலாசத்துடன் எழுதிக் குறிப்பிட்ட விலாசத்தை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும். ஒரு போஸ்காட்டில் ஒரு கேள்வி மட்டும் கேட்கலாம்.

"சந்தேக நிவிர்த்தி" சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி

# ஆய்வுமன்றம்

எம், கே, சிவசுப்பிரமணியம், பேராதனை.

உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பெண் ஜாதகம் உங்களுக்கு நல்ல பொருத்தமாக அமைகின்றது. விவாகம் செய்வதால் வாழ்க்கை சிறப்பானதாகவே இருக்கும். பாதகமேதுமில்லை.

ம. க, சிவசுப்பிரமணியம், பேராதனை.

நீங்கள் அனுப்பியிருந்த உங்கள் ஜாதகப்படி 2-ம் வீட்டில் சனி இருப்பதும் 2-ம் அதிபன் 4-இல் இருக்க சனி நோக்குவதும் கல்வி முன்னேற்றம் முதலியவற்றிற்கு பங்கத்தையே காட்டுகின்றது. புலமைப்பரிசுக் கல்வி என்பன சாத்தியமாவது சந்தேகமாகவே தென்படுகின்றது. வெளிநாட்டுப்பலனும் தற்பொழுது கைகூடும் சாத்தியம் எதுவும் இல்லை.

ந, யோகலிங்கம், சேனைக்குடியிருப்பு, கல்முனை.

உங்களுக்கு 2-ம் வீடு பாபகர்த்திரி யோகம் பெறுவதும் 4-ம் அதிபன் சனியுடன் சேருவதும் எவ்வளவு முயற்சியெடுத்தாலும் கல்வி வாய்ப்பது கடினம், சுக்கிரன் ஆட்சிப் பெற்றாலும் 6-ம் வீட்டில் இருப்பதால் சுக்கிர தசைக் காலமும் நன்மை தருமென எதிர்பார்க்க முடியாது. சூரியன் சந்திரன் என்பன முறையே 6-ம், 12-ம் வீடுகளில் இருப்பதால் அவைகளின் நற்பலனும் குறிப்பிடும் படியாக இருக்கமாட்டாது.

வா. நவரத்தினராசா, தங்கோடை, காரைநகர்.

தங்களுடைய ஜாதகப்படி குறிப்பிடக்கூடிய நல்ல யோகங்கள் எதுவும் இல்லை, மிதுனலக்கின காரருக்கு யோககாரகர்கள் இல்லை. 12-ல் சூரியன் செவ்வாயுடன் இருப்பது தோஷம். 2-ம் அதிபன் கேதுவுடன் சேர்ந்து 6-ல் இருப்பதால் அதிகமான சொத்துக்கள் கிடைப்பதற்கு ஏது இல்லை. வாழ்க்கை ஓரளவு நன்றே. தற்போது (1992 வரை) கேதுதசை நடைபெறுவதால் இக்கால எல்லைக்குள் வேலைவாய்ப்பும் கடினமே. 1992 இன் மேல் நன்று.

எஸ். தியாகசேதுபதி, பெயிலிரேட், நாவலப்பிட்டி.

நீங்கள் அனுப்பியிருந்த பிறந்த திகதி, நேரம் முதலியவற்றினைக் கொண்டு பலன் கூறமுடியாது. உங்கள் ஜாதகத்தைக் கணித்து விண்ணப்பப் படிவத்தைப் பூரணமாக நிரப்பினாற்றானே பதில் தரமுடியும்.

சி, வடிவேலு மந்துவில், கொடிகாமம்.

உங்கள் ஜாதகப் பிரகாரம் தனகாரகர்களான குரு, சுக்கிரன், கேதுவுடன் சேர்ந்து 12-ல் மறைவதும் 2-ம் வீட்டை சனி நோக்குவதும் பொதுவாகப் பொருளாதாரக் கஷ்டத்தை ஏற்படுத்திய வண்ணமே இருக்கும். உழைப்பினால் மிச்சம் ஏற்படுவது கடினம். 6-ல் ராகு இருப்பதும் லக்னதிபதி கேதுவுடன் சேருவதும் தேகசுகக் குறைவை ஏற்படுத்தக் காரணமாயுள்ளன. குல தெய்வவழிபாடுகள் செய்து வந்தால் மனச்சாந்தி கிட்ட இடமுண்டு.

இ; செல்லத்துரை (புலவர்) சிறுப்பிட்டி, நீர்வேலி.

உங்களுடைய மகளின் ஜாதகத்தில் ராகு கேதுக்களுக்கு ஒரு புறத்தில் எல்லாக் கிரகங்களும் அமைவதால் காலசர்ப்பயோகம் உண்டு. இதனால் எந்தக்கிரகங்களும் நன்மையான பலன்களைக் கொடுக்க மாட்டா. சூரியன், புதன் 11-ம் வீட்டில் லக்னதிபதி செவ்வாயுடன் இருப்பது நன்மையென்றே சொல்ல வேண்டும். ஆயினும் காலசர்ப்ப யோகத்தால் பலன் கிடைக்கவில்லை. இவருக்கு 35 வயதின் மேல் தான் நன்மையான பலன்கள் கிட்டும். தொழிலும், திருமணமும் அப்போ கிட்டலாம்.

மூ. தம்பிராசா,

புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.

தங்களுக்கு தற்போது சுக்கிரமகாதெசையில் வியாழன் புத்தி நிகழ்கிறது. வியாழன் 2-ல் இருந்து சனியின் பார்வையைப் பெறுகின்றது. 1992-ம் ஆண்டுவரை வியாழனின் புத்தி நடைபெறுவதால் தேகசுகம் நன்றாயிராது. அதன்மேல் நற்பலன் உண்டு. ஆயுர்வேத வைத்தியம் பலனளிக்கும்.

எம். ஐ. முகமட் கலீல், திருமலைவீதி, கண்டி.

உங்கள் ஜாதகத்தில் கல்விக்கு அதிபனான புதன் லக்னத்தில் இருந்தாலும் 2-ம் வீட்டை சனி பார்ப்பதால் கல்வி விடயத்தில் தடை தாமதங்கள் ஏற்பட்ட வண்ணமிருக்கும். வாழ்க்கை நிலையும் ஓரளவே நன்மையானதாய் இருக்கும்.

வள்ளியம்மை. தியாகராசா, டிக்கோயா.

உங்கள் ஜாதகத்தில் 7-ம் வீடு பாபகர்த்தரி யோகம் பெற்றிருப்பதாலும், 2-ம் வீட்டை சனி

நோக்குவதாலும் வாழ்க்கை நிம்மதியற்றதாகவும் சிக்கல்கள் நிறைந்ததாயும் இருக்கும். குலதெய்வ வழிபாடும் நிதான செயற்பாடும் நிம்மதிதரும்.

கோ. விஜயகுமாரன், கொழும்பு—13.

உங்கள் தகவல்களின்படி உங்கள் ஜாதகத்தில் 7-ல் செவ்வாய் இருப்பது தோஷமே. அச்செவ்வாய் சூரியனுடன் கூடியிருப்பதும் திருமண விடயத்தில் மகிழ்ச்சியைக் கொடுக்கமாட்டாது. உங்கள் மனைவியின் ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் இல்லை. எனவே குடும்பச் சச்சரவுகள் மலியவே காணும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு குடும்பத்தை நடாத்த முயலவும்.

கு. பாலகணேசன், மகியங்கனைவீதி, பதுளை.

உங்களுக்கு 1990 ஆகஸ்ட்டின் மேல் ஒரு வருட காலத்திற்குள் திருமணம் கைகூடும் பலன் தென்படுகிறது.

க. அகிலன், நீர்வேலி தெற்கு.

உள்நாட்டில் கல்வி முன்னேற்றம் அரிதாகவே தென்படுகிறது. வெளிநாட்டில் பயில்வது நன்மை தரும்.

எஸ். கே. ஜெயபாபு, மஸ்கெலியா.

உங்களுக்கு தற்சமயம் புதன்தெசையில் வியாழன் புத்தி நடைபெறுகின்றது. இது 1982-02-14இல் தொடங்கியது; 1991-05-20 வரை நிகழும். அதன் மேல் புதன் தெசையில் சனி புத்தி 1994-01-29 வரை நிகழும். அதன் மேல் கேதுதெசை ஆரம்பிக்கும். தற்பொழுது அதிஷ்டகரமான தெசை புத்திகள் எதுவுமில்லை. சுக்கிரன் மகாதெசையே நல்ல பலன்களைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

யோ. யோ. யோகராசா,
தொ. நு. கல்லூரி, சம்மாந்துறை.

தங்களுக்கு 1990 ஆகஸ்டின் மேல் இடமாற்றம் கிடைக்கலாம்.

அ. யோகேஸ்வரன், தொண்டமானாறு.

உங்களுடைய வெளிநாட்டுவாசம் 1990-ம் ஆண்டு முடியும்வரை தொடரும். 1990 மார்ச்சில் தொடங்கும் ஏழரைச்சனி மத்திமபலனைத் தர வல்லதாகவே அமையும். தங்களுக்கு சகடயோகம் உண்டு. இது நிம்மதியற்ற வாழ்க்கையையே தந்துகொண்டிருக்கும்.

ஜாதகத்தில்......... (20-ம் பக்கத்தொடர்ச்சி)

நோய், இனசன, இளைய சகோதர விரோதம் அடிமையாள் தொல்லை, புத்திரபலம், புத்திர வீனம், தெய்வநிந்தனை என்பனவுண்டாம்.

## தனு

இந்த இலக்கினகாரருக்குச் சனி 2,3க்குடையராகி 6ல் நட்புப் பெறுவார். இதனால் வாழ்க்கையில் வெற்றி, காரியசித்தி, அதிகாரம், நாஸ்தீகம், சாதுரியம், தைரியம், பராக்கிரமம், கவலை, தொற்றுநோய்கள். தனதானியவிருத்தி, குடும்ப மேன்மை, கல்விவிருத்தி, பூமியால் நன்மை, அடியாள் நன்மை என்பனவுண்டாம்.

## மகரம்

இவர்களுக்குச் சனி 1-2 க்குடையராகி 6ல் மிதுனத்தில் நட்புப் பெறுவார். இதனால் அலைச்சல், கவலை, தாய்மைக்குறைவு, புதிநுட்பம், தந்திரம், குறுகியமனம், தத்துவார்த்தம், இரசாயன எந்திரவியல் ஈடுபாடு அசகாயசூரத்துவம் சரீரகாந்தி, மகிழ்ச்சி, ஆயுள்விருத்தி, ஆசாரம், வித்தியாலாபம், நண்பர்களால் நன்மை என்பனவுண்டாம்.

## கும்பம்

இந்த இலக்கினகாரர்களுக்குச் சனி 1,12-க்குடையராகி கடகத்தில் பகைப் பெறுவார். அதனால் ஏழ்மை, பற்சேதம், அற்பபுத்திர பாக்கியப் பேறு, மந்தபுத்தி, தந்திரம், சுபநலம், செல்வம், ஏமாற்றம், துக்கம், தாயினால் நன்மைக்குறைவு தேககசுக்குறைவு, அற்பஆயுள், ஆசாரக்குறைவு, இழிதொழில், வீண் விரயம் சயனசுகக்குறைவு என்பனவுண்டாம்.

## மீனம்

இவர்களுக்குச் சனி 11-12க்குடையராகி 6ல் சிங்கத்தில் பகைப்பெறுவார். இதனால் துரதிர்ஷ்டம், கடும் உழைப்பு, பிடிவாதம், எழுத்து வன்மை, தீயசிந்தை, மூத்தசகோதரதோஷம், புத்திரபலம், காரியக்கேடு, செய்தொழிற்கேடு, சயனசுகக் குறைவு, தான தருமகாரியக் குறைவு வழக்கினால் விரயம் என்பனவுண்டாம். (வளரும்)

முக்கிய குறிப்பு:-

'சோதிட மலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். ஆ—ர்

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.




## எண்ணெயிட்டு முழுகுவதால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?

உடல்வலி நீங்குகிறது. இளமையைப் பாதுகாக்கிறது.
முதுமையை விரட்டியடிக்கிறது. கண்களைப் பாதுகாக்கிறது.
பார்வையைப் பிரகாசமாக்குகிறது. உடலுக்கு வலிமையைத் தருகிறது.
ஆயுளை விருத்தி செய்கிறது. நல்ல தூக்கத்தை உண்டாக்கிறது.
தோலை மிருதுவாக்கிறது. உடல் சோர்வை அகற்றுகிறது.
கபத்தை நீக்குகிறது. பல்லில் ஏற்படும் நோயைத் தடுக்கிறது.
சுவையின்மையை மாற்றுகிறது.

எண்ணெய் முழுக்குக்கு உகந்த
**ஒலிவ் ஸ்நானப்பவுடரை**
வாங்கி உபயோகியுங்கள்.

விலை ரூபா:
**1/- மட்டுமே**

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 78, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

**விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!**

## 1990-ம் ஆண்டிற்கான

# திருக்கணித பஞ்சாங்க

## ★ மாதக்கலண்டர்கள் ★ டயறிகள்

வழமைபோல் சகல அம்சங்களுடனும் வெளிவந்துள்ளன.
எல்லா "சோதிடமலர்" வியாபாரிகளிடமும் கிடைக்கும்

விபரங்களைப் பெற்றுக்கொள்ள:

**திருக்கணித நிலையம்**

மட்டுவில், சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280